அல்லாஹ்வின் கட்டளை

اَلَّذِيْنَ اٰمَنُوْا وَتَطْمَئِنُّ قُلُوْبُهُمْ بِذِكْرِ اللّٰهِ اَلَا بِذِكْرِ اللّٰهِ تَطْمَئِنُّ الْقُلُوْبُ○

இவர்களே நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களின் உள்ளமே அல்லாஹ்வின் நினைவால் அமைதியடைகின்றது. கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன. (13:29)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 11

பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 46

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - ஜமாதிஸ் ஸானீ 01
ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - நுபுவ்வத் 12 ★ 12 நவம்பர் 2026

அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நபிமொழி

எவரிடம் மூன்று குணங்கள் உள்ளதோ அவர் ஈமானின் இனிமையை பெற்று விட்டார்

عَنْ أَنَسٍ رَضِيَ اللهُ عَنْهُ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ:
"ثَلَاثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلَاوَةَ الْإِيمَانِ، أَنْ يَكُونَ اللهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا، وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لَا يُحِبُّهُ إِلَّا لِلهِ، وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الْكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ"

(ஸஹீஹ் அல்-புகாரி, கிதாபுல் ஈமான், ஹதீஸ் எண்: 16)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மூன்று குணங்கள் எவரிடம் காணப்படுகிறதோ அவர் ஈமானின் இனிமையை பெற்று விட்டார்.

அல்லாஹ்வும், அவனது தூதரும் மற்ற அனைவரையும் விட அவருக்கு மிகவும் விருப்பமானவர்களாக ஆவது. அவர் ஒரு மனிதனை நேசிப்பது முற்றிலும் அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டுமே அமைவது. நெருப்பில் தூக்கி வீசப்படுவதை எவ்வாறு வெறுப்பாரோ, அதேபோன்று குஃப்ர் எனும் இறை மறுப்பிற்கு மீண்டும் திரும்புவதை அவர் வெறுப்பது.'

* * * * * * * * * * * *

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

நமது சொர்க்கம் நமது இறைவன் ஆவான்

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'நமது சொர்க்கம் நமது இறைவன் ஆவான்; நமது பேரின்பங்கள் நம் இறைவனிடத்தே உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம். மேலும் அழகு அனைத்தும் அவனிடம் கண்டோம். இந்தச் செல்வம் உயிரைக் கொடுத்தாயினும் பெறத் தக்கது; ஒருவர் தன்னை முற்றிலும் இழந்தாகிலும் பெறத்தக்கது இம்மாணிக்கம்.

ஆகவே, இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உங்கள் தாகத்தைத் தணிக்கும். இது உங்களைக் காக்கும் உயிர் ஊற்றாகும். நான் என்ன செய்வேன்? இந்த நற்செய்தியை மக்களின் உள்ளங்களில் எவ்வாறு உறையச் செய்வேன்? இவன்தான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்கும் பொருட்டு தெருக்களிலே எந்த முரசை அறைந்து தெரிவிப்பேன்? மக்கள் கேட்கும் வகையில் அவர்கள் காதுகள் திறக்க என்ன மருத்துவம் செய்வேன்?' (கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின், தொகுதி 19, பக்கம் 22 -21)

மேலும் கூறினார்கள்:

'மிகவும் உயர்ந்தபட்ச அந்தஸ்தில் ஒருவருடைய இருப்பு மிகவும் அவசியமானதாகக் கருதப்படும்போதோ, அவர் வணங்கப்படுபவராக ஆகிவிடுகிறார்; இது வல்ல இறைவனின் இருப்பு மட்டுமே ஆகும். அவனுக்கு எந்த மாற்றும் இல்லை. எந்தவொரு மனிதனையோ அல்லது படைப்பையோ பற்றி இவ்வாறு கூற முடியாது.'

(மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 165, 1982 பதிப்பு)

* * * * * * * * * * * *

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கூற்றுகள்

மனிதப் படைப்பின் அசல் நோக்கம் இறைவனின் நினைவும் திக்கும் ஆகும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

' ஆக, மனிதப் படைப்பின் அசல் நோக்கம் என்பது அல்லாஹ்வின் நினைவும், அவனது திக்ரும் ஆகும். இறைவன் கிடைத்துவிடும்போது, பின்னர் எந்தவொரு வேதனையும், தவிப்பும் இருப்பதில்லை; மாறாக நிம்மதி மட்டுமே நிலைத்திருக்கின்றது. எந்த மக்கள் உலகின் தேடுதலில் இருக்கின்றனரோ அவர்களுக்கு எவ்வளவுதான் முன்னேற்றம் கிடைத்தாலும், அவர்களின் ஏக்கம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனால் எவர் அல்லாஹ்வின் பக்கம் செல்கிறாரோ, எந்த அளவுக்கு அவன் பக்கம் கவனம் செலுத்துகிறாரோ, அந்த அளவுக்கு அவரது உள்ளத்தின் நிம்மதியும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இதிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், நமது வாழ்வின் அசல் நோக்கமாக இறைவன் தனது இருப்பைத் தேடுதலையே ஆக்கியுள்ளான். எனவே எப்போது அந்த நோக்கம் நிறைவேறிவிடுமோ அப்போது மனிதனுக்கு மனநிறைவு கிடைத்து விடுகிறது.

நமது ஆட்சியாளர்களையேப் பாருங்கள்: ஆட்சியாளர்களின் பாதுகாப்பு அரசாங்கத்தின் வழிமுறையாகும். ஆனால், சில தலைவர்களுடைய அச்சத்தின் நிலை எவ்வாறுள்ளதென்றால், அவர்களுக்காக வெளிநாட்டிலிருந்து தண்ணீர் மூடப்பட்டு கொண்டு வரப்படுகிறது; அவர்களுக்கு முன்னால் அது திறக்கப்படுகிறது. அதன் பிறகும் கூட முதலில் மற்றவர்களுக்கு பருகக் கொடுக்கப்படுகிறது. பின்னர் அரசர் அருந்துகிறார். இதே போன்றுதான் அவர்களின் உணவிலும் ஆயிரக்கணக்கான முன்னெச்சரிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலில் அதை சமைத்தவருக்கே உணவாக வழங்கப்படுகிறது, பின்னர் மருத்துவர் அதை

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் பாரத் வருடாந்திர இஜ்திமா 2026ம் ஆண்டு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி

அன்பிற்குரிய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் பாரத் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு!

அல்லாஹ்வின் அருளால் உங்களுடைய வருடாந்திர இஜ்திமாவை நடத்துவதற்கான நற்பேறு உங்களுக்கு கிடைத்து வருகிறது. அல்லாஹ் இதனை எல்லா வகையிலும் வெற்றிகரமானதாகவும். அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக! ஆமீன்!

நான் இந்தத் தருணத்தில் சில முக்கியமான பொறுப்புகளின் பக்கம் உங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன்.

நாம் நமது வாழ்க்கையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப அமைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோமா?' என்று மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் உறுப்பினர்கள் தங்களை உண்மையான சுயபரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். நாம் நம்மைப் பரிசோதித்துப் பார்த்தால், 'அன்ஸாருல்லாஹ்' என்று அழைக்கப்பட்டும் நம் நிலைமை கவலைக்குரியதாகவே இருக்கிறது. அன்னார் (அலை) அவர்களோ ஜமாஅத்தின் ஒவ்வோர் உறுப்பினரிடமிருந்தும் மிக உயர்ந்த தரத்தையே எதிர்பார்க்கிறார்கள். ஆனால், நாம் அன்ஸாருல்லாஹ் என்று அழைக்கப்பட்டுக் கொண்டு, கவனம் செலுத்த வேண்டியவற்றின் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்துவிடலாகாது. நாம் நமது வீடுகளின் சூழலைத் தூய்மையான முன்மாதிரிகள் நிலைநிறுத்தப்படும் இடமாக மாற்ற வேண்டும். நமது மனைவி பிள்ளைகளுக்கு முன்பாகவும், நமது சமுதாயம் மற்றும் சுற்றுச் சூழலில் சமூகத்தின் மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் ஒரு வழிகாட்டக்கூடிய முன்மாதிரிகளை நிலைநாட்டுபவர்களாக நாம் திகழ வேண்டும். நமது சந்ததிகளைச் சீர்திருத்துவதற்காக, நமது சந்ததிகளைக் காப்பாற்றுவதற்காக, நமது சந்ததிகளிடத்தில் மார்க்கத்தின் மீதான அன்பை உருவாக்குவதற்காக, நமது சந்ததிகளை இறைவனுடன் இணைப்பதற்காக, நமது சந்ததிகளிடம் ஜமாஅத் மீதான மரியாதையையும், தொடர்பையும் உருவாக்குவதற்காக நாம் ஒரு முன்னுதாரணமாக அமையக் கூடிய முன்மாதிரிகளை நிலைநாட்ட வேண்டும்.

பிள்ளைகளின் தர்பிய்யத் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு வழிமுறையைக் கூறியுள்ளார்கள்; அது என்னவென்றால், அவர்களுக்காக துஆ செய்யுங்கள் என்பதாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நேர்வழி மற்றும் தர்பிய்யத் இறைவனின் செயலாகும். கடுமையாக பின்தொடர்வதும், ஒரு விவகாரத்தில் வரம்புமீறி வற்புறுத்துவதும், அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் பிள்ளைகளை தடுப்பதும், நாமே நேர்வழியின் உரிமையாளர்கள் ஆவோம்; மேலும் நாங்கள் அதனை எங்களது விருப்பத்திற்கேற்ற ஒரு வழியில் கொண்டுவந்து விடுவோம் என்பதன் வெளிப்பாடாகும். இது ஒரு வகையான மறைமுகமான இணைவைத்தலாகும். இதிலிருந்து நமது ஜமாஅத் தவிர்ந்திருக்க வேண்டும். நாமோ எமது பிள்ளைகளுக்காக துஆ செய்கிறோம்; மேலும் மேலோட்டமாக ஒழுங்குமுறைகளையும், நல்லொழுக்கப் போதனைகளையும் கடைப்பிடிக்கச் செய்கிறோம். அவ்வளவுதான்! இதை விட அதிகமாக எதுவும் இல்லை. பின்னர், எமது முழு நம்பிக்கையையும் அல்லாஹ்வின் மீதே வைக்கிறோம். ஒருவரிடத்தில் நற்பேறின் விதை அமைந்திருப்பதைப் பொருத்து அது உரிய நேரத்தில் தானாகவே தழைத்தோங்கி விடும்.' (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 5)

எனவே, நல்ல முன்மாதிரிகளும், துஆவும் பிள்ளைகளின் தர்பிய்யத்துடன் ஆழமான தொடர்புடையவையாகும்; இதன் பக்கம் நாம் சிறப்புக் கவனம் செலுத்தவது அவசியமாகும். தொடர்ந்து ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றி வாருங்கள்; மேலும், அல்லாஹ்வுடனான தொடர்பில் முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

உண்மையில், ஒரு நம்பிக்கையாளர், ஓர் இறையச்சம் கொண்ட அடியார் தன்னை தானே அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட்டால், பின்னர் அல்லாஹ்வே அவருக்குப் பொறுப்பாளனாக ஆகிவிடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

'அல்லாஹ் இத்தகையோரின் பொறுப்பாளனாக ஆகிவிடுகிறான்; 'வஹுவ யதவல்லஸ் ஸாலிஹீன்' (அல்-அஃராஃப்: 197) என்று அல்லாஹ் கூறியது போன்று அவன் அவ்வாறு ஆகிவிடுகிறான்.

பொருள்: அவன் நல்லடியார்களுக்கு துணை நிற்கிறான். அவர்களின் பொறுப்பாளனாக ஆகிறான். ஹதீஸில் வந்துள்ளது: அல்லாஹ் அவர்களின் கையாகிவிடுகிறான்; அதனைக் கொண்டு அவர்கள் பிடிக்கிறார்கள்; அவர்களின் கண்களாகிவிடுகிறான், அதனைக் கொண்டு அவர்கள் பார்க்கிறார்கள்; அவர்களின் காதுகளாகிவிடுகிறான்; அதனைக் கொண்டு அவர்கள் கேட்கிறார்கள்; அவர்களின் பாதங்களாகிவிடுகிறான்; அதனைக் கொண்டு அவர்கள் நடக்கிறார்கள்.

மற்றொரு ஹதீஸில் வந்துள்ளது: எவன் என் நேசருடன் விரோதம் கொள்கிறானோ, அவனுடன் போரிட நான் தயாராக உள்ளேன் என்று அல்லாஹ் கூறினான்.

மற்றோர் இடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

ஒரு பெண் சிங்கத்திடமிருந்து அதன் குட்டியை ஒருவர் பறித்தால் அது எவ்வாறு ஆவேசத்துடன் பாயுமோ அதேபோன்று அல்லாஹ்வின் நேசர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தும்போது அல்லாஹ்வின் கோபமும் அவன் மீது பாய்ந்து செல்கிறது.' (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 680 - 681)

ஆகவே, எவர்களுக்கு அல்லாஹ் பொறுப்பாளனாக ஆகிவிடுகிறானோ, அவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள் ஆவர்! அல்லாஹ் எவர்களுக்கு நேசனாக ஆகிவிடுகிறானோ அவர்களின் துக்கமும், பயமும் நீங்கிவிடுகின்றன; மேலும் வருங்காலத்தில் நற்செயல்கள் செய்வதன் பால் அவர்களுக்கு கவனம் ஏற்பட்டு விடுகிறது.

நினைவிற் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுடன் நமக்கு இத்தகைய தொடர்பு உருவாகி விட்டால், மேலும் துஆவின்றி நமக்கு வேறு வழியில்லை என்று நாம் புரிந்து கொள்ளும் அளவில் துஆவின் மீது நமக்கு நம்பிக்கை இருந்தால் மேலும் நமது ஐவேளை தொழுகைகளில் உருக்கத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்தால், மேலும் வேதனையை உருவாக்க முயற்சி செய்தால் பிள்ளைகளுக்காக சிறப்பான துஆக்கள் செய்வதற்கு முயற்சி செய்தால், பின்னர் அல்லாஹ்வின் அருளால் நமது சந்ததிகள் தப்பித்து விடும். அவர்கள் எப்போதும் மார்க்கத்தின் மூலத்துடன் தொடர்புடையவர்களாகவும் இருப்பார்கள்; மேலும் இறைவனுடன் அவர்களுக்கு தொடர்பும் உறுதியானதாக ஆகிக் கொண்டே செல்லும்.

நீங்கள் உங்களது நிலைமைகளில் மாற்றம் செய்யக் கூடியவர்களாக திகழவும், உங்களது பிள்ளைகளின் நிலைமைகளிலும் மாற்றத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்யக் கூடியவர்களாக திகழவும், உங்களது வீடுகளின் சூழல்களை அமைதி நிறைந்ததாக ஆக்கக் கூடியவர்களாக திகழவும் அல்லாஹ் உங்களுக்கு நற்பேறு வழங்குவானாக!.

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * *

ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பொன்னான அறிவுரைகளும் அன்னாரின் பரிசுத்த வாழ்விலிருந்து ஈமானை வலுவூட்டக்கூடிய சம்பவங்களும்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 செப்டம்பர் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தபூக்** மாதம் **25 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த சில குத்பாக்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தவக்கல் எனும் இறை நம்பிக்கையின் மிக உயர்ந்த நிலையைப் பற்றி நான் எடுத்துரைத்து வந்துள்ளேன்.

இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிக்கு ஏற்ப அதை நமக்காக எவ்வாறு எடுத்துரைத்தார்கள்? என்ன போதனை வழங்கினார்கள்? அதன் மீது எவ்வாறு செயல்பட்டார்கள்? இது தொடர்பாக இன்று சிலவற்றை நான் கூறுவேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'தவக்கல் என்பது என்னவென்றால், ஏதேனும் ஒரு காரியத்தை அடைவதற்காக அல்லாஹ் நிர்ணயித்தியிருக்கும் காரணிகளை இயன்றவரை ஒன்றுகூட்டி (அதாவது பயன்படுத்தியவாறு), பின்னர் இறைவா! நீயே இதற்கு நல்ல விளைவை ஏற்படுத்துவாயாக! என்று நீங்களே துஆக்களில் ஈடுபட்டு விடுவதாகும்.

நூற்றுக்கணக்கான பேரழிவுகளும் ஆயிரக்கணக்கான துன்பங்களும் உள்ளன; அவை அந்தக் காரணிகளையும் அழித்துத் தரைமட்டமாக்கக் கூடியவையாகும். அவற்றின் பாதிப்பிலிருந்து எங்களைப் பாதுகாத்து, உண்மையான வெற்றியையும், எங்களது இலக்கையும் அடையச் செய்வாயாக.' (மல்ஃபூஸாத், பாகம் 4, பக்கம் 288, பதிப்பு 2022)

மனிதன் காரணிகளைப் பயன்படுத்துகிறான்; ஆனால், பலவிதமான துன்பங்கள் எத்தகையவையாக இருக்கின்றன என்றால், எந்தக் காரணிகளை நாம் சார்ந்திருக்கிறோமோ அவை அழிந்து போய்விடக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகி விடுகின்றன. எனவே, அல்லாஹ் அவற்றின் தீய விளைவுகளிலிருந்து நம்மைக் காக்க வேண்டும் என்று நாம் அல்லாஹ்விடம் உதவி கோர வேண்டும். இது எத்தகைய நிலை என்றால், இதன் வழி நடந்து ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் அருள்களைப் பெறக் கூடியவராக ஆக முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

' அல்லாஹ்வை திருப்தி கொள்ளச் செய்வது என்பது ஒவ்வொரு மனிதனாலும் இயன்ற காரியம் அல்ல; மாறாக இந்த தவக்குல், 'தபத்துல்' அதாவது இறைவனின் பக்கம் முழுமையாகக் கவனம் செலுத்துவது, திருப்தி மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மிக உயர்ந்த அந்தஸ்தாகும். மனிதன் அந்த அந்தஸ்தை சென்றடைந்துவிடும்போது, அவனுக்கு தனது எஜமானனிடம் எந்தவிதமான முறையீடோ அல்லது புகாரோ இருப்பதில்லை. மேலும், அல்லாஹ் தன் அடியானின் மீது திருப்திக் கொள்வதற்கு இது அடிப்படையாகும். அடியானின் முழுமையான வாய்மை, நன்றியுணர்வு மற்றும் மிக உயர்ந்த தூய்மை, பரிசுத்தம் மற்றும் முழுமையான கீழ்ப்படிதல் ஆகியவற்றை சார்ந்துள்ளது. மேலும், இவற்றின் மூலமே ஸஹாபிகள் இறை ஞானம் மற்றும் ஆன்மிகப் பாதையின் அனைத்துப் படிகளையும் கடந்தார்கள் என்று தெரிய வருகிறது.' மேலும் ஸஹாபிகள் அல்லாஹ்வுடன் கொண்ட தொடர்பு மற்றும் தவக்குல் ஆகியவற்றின் அந்த உன்னத நிலையை அடைந்தார்கள்; அது நமக்கு ஒரு முன்மாதிரியாக ஆக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் நோயாளிகளைக் குணப்படுத்தி வந்தார்கள் என்று அன்னாரைப் பின்பற்றுபவர்கள் கூறுகின்றனர். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதனால் அந்த சீடர்களுக்கு அல்லாஹ்வின் மீதான 'தவக்குல்' அதிகரித்துவிட்டதா என்ன? தவக்குல் அதிகரிப்பது என்பது அல்லாஹ்வின் தனிப்பெரும் அருளால் மட்டுமே நிகழ்கிறது. மேலும், இறைவனின் பக்கம் முழுமையான கவனம் இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: 'இதற்கான முன்மாதிரியை (அதாவது தவக்குலிற்கான முன்மாதிரியை நீங்கள் சீடர்களிடம் தேடினால், அது ஒருபோதும் கிடைக்காது.' எனவே, வெறும் 'நோய்களை நீக்குவது' அதாவது நோய்களை அகற்றுவது அதாவது நோய்களை நீக்கிவிடுவதால் (மட்டும்) எதுவும் ஆகிவிடுவதில்லை. சூஃபிமார்களைப் பற்றியும், அவர்கள் (நோய்களைக்) குணப்படுத்தும் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுகிறார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: 'அதில் பெருமகிழ்ச்சி அடைந்து விடுவது எந்த புத்திசாலித்தனமும் அல்ல. இது ஒன்றும் அறிவுடைமை இல்லை. மேலும், ஆன்மிக சிறப்புகளை விரும்புபவர் இத்தகைய விஷயங்களில் மகிழ்ச்சியடைய முடியாது. எனவே, நீங்கள் உங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, அந்த தயாளனான இறைவன் உங்களைப் பொருந்திக்கொள்ளும் வகையிலும், நீங்கள் அவனைப் பொருந்திக்கொள்ளும் வகையிலும் அவனுடன் அத்தகைய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையே நான் உங்களுக்காக விரும்புகிறேன். பின்னர் அவன் உங்கள் உடலில், உங்கள் கூற்றுகளில் எத்தகைய பரக்கத்தை வைத்து விடுவான் என்றால், நோய்களை நீக்குபவர்கள் கூட அவற்றைப் பார்த்து வியப்படைந்து வெட்கத்திற்குள்ளாகி விடுவார்கள்.' (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 344, பதிப்பு 2022)

அதாவது, நோயாளிகளைக் குணப்படுத்துபவர்கள், நோய்களை நீக்குபவர்கள் இருக்கின்றனர்; அல்லாஹ்வுடன் உங்களுடைய தொடர்பு இவ்வாறு இருக்குமானால், பின்னர் உங்களுடைய இந்நிலையைக் கண்டு அவர்கள் தாங்களே வெட்கத்திற்குள்ளாகிவிடுவார்கள். எனவே ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்து, அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டால், பின்னர் அவரும் சுயமே அற்புதங்களை காட்டுவதற்கு தகுதியானவராக ஆக முடியும்.

அடுத்து, ஒரு சந்தர்ப்பத்தில் தவக்குல் மற்றும் தபத்துல் ஆகியவற்றின் பால் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'துன்பத்தின் காயத்திற்கு அல்லாஹ்வை நம்புவதைப் போன்ற ஒரு சுகமளிக்கும் மற்றும் அமைதி தரும் களிம்பு வேறெதுவும் இல்லை என்பதையும் நினைவில் வையுங்கள். அல்லாஹ்வை நம்புகிற ஒரு நபர், கடுமையிலும் கடுமையான துன்பங்களிலும், இன்னல்களிலும் கூட உள்ளுக்குள் அமைதியையும், ஆறுதலையும் பெறுகிறார். மேலும், அவர் தனது இதயத்தில் கசப்பையும், வேதனையையும் உணர்வதில்லை.

அந்தத் துன்பத்தின் உச்சகட்ட முடிவு என்னவாக இருக்க முடியும்? என்றால், தக்தீரே முபர்ரம் என்றால், அல்லது அது தவிர்க்க முடியாத இறை நியதி என்றால் மரணம் வந்து விடும். நம்பிக்கையாளருக்கும் கஷ்டங்கள் வரத்தான் செய்கின்றன; எனினும்,

அல்லாஹ் மீது அவருக்கு இருக்கும் நம்பிக்கை உறுதியானது என்றால் பின்னர் அவர் அவற்றை தன் தலை மீது ஏற்றிக் கொள்வதில்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அதிகபட்சம் என்ன நடக்கும்? மரணம் வந்துவிடுமா?. ஆக, அன்னார் (அலை) கூறினார்கள்: ஆனால், அதனால் என்ன நிகழும்? உலகம் ஒன்றும் ஒருவர் நிரந்தரமாக வாழக்கூடிய இடம் இல்லையே! முடிவில், எல்லாரும் இந்த உலகத்தை விட்டுச் செல்ல வேண்டிய ஒரு நாளும், நேரமும் வந்தே தீரும். அவ்வாறிருக்க, அவருக்கு மரணம் வந்துவிட்டால் பின்னர் என்ன நஷ்டம்? நம்பிக்கையாளருக்கு இந்த மரணமோ இன்னும் அதிக ஆறுதல் நல்கக் கூடியதாகவும், நேசனை சந்திக்கும் வழிமுறையாகவும் ஆகிவிடுகிறது.'

அவர் உண்மையான நம்பிக்கையாளராக இருந்தால், அல்லாஹ் மீதான நம்பிக்கை உறுதியானது என்றால், பின்னர், 'நல்லது! அல்லாஹ்வை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்து விடும்' என்றே அவர் கூறுவார். ஏனெனில் அவர் அல்லாஹ்வின் மீது முழுயான நம்பிக்கையும், அவனது வல்லமைகளின் மீது நம்பிக்கையும் கொண்டுள்ளார். மேலும் மறுமை உலகம் தனக்கு நிரந்தர நிம்மதியானது என்பதை அவர் அறிவார்.

எனவே வெறும் துன்பம் அது நோயாகவோ அல்லது வேறு ஏதாவது வகையிலான துன்பம் அல்லது வேதனையாக இருந்தாலும் சரி! அது தண்டனைக்கு காரணமாக இருக்க முடியாது; மாறாக, எவருக்கு அல்லாஹ் மீது ஈமானும், நம்பிக்கையும் இல்லையோ அவருக்குத்தான் அது துன்பம் வழங்கக் கூடிய தண்டனையாக அமைகிறது. ஒரு நம்பிக்கையாளருக்கு கஷ்டங்கள் நேர்ந்து விட்டாலும் கூட அவை அவருக்கு தண்டனையாக இருப்பதில்லை. அல்லாஹ் மீது ஈமானும், நம்பிக்கையும் இல்லாதபோதுதான் அது தண்டனையாக அமைகிறது. எந்த நபருக்கு ஈமான் இல்லையோ, அவருக்கு நிச்சயமாக கடும் தண்டனையாக அமைகிறது.

மேலும், மரணமே வரக்கூடாது என்று யாராவது நினைத்தால், பின்னர் இது பக்குவமற்ற எண்ணமாகும். ஏனெனில் அல்லாஹ் இந்த உலகத்தை நிலையற்றதாக ஆக்கியுள்ளான். அத்தகைய நபருக்கு மறுமையில் கடுமையான வேதனை மிக்க நரகம் காத்திருக்கும்; அதற்கு அவர் தயாராக இருக்க வேண்டும்.'

(மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 258, பதிப்பு 2022)

எனவே, 'இது சிரமமா? அல்லது வேதனையளிக்கும் தண்டனையா? அல்லது அல்லாஹ்விடமிருந்து வரும் சோதனையா? என்று எங்களுக்கு எப்படி தெரிய வரும்?' என்று கேட்கும் மக்களுக்கும் இதுவே பொதுவான பதிலாகும்.

தம்மைப் பின்பற்றுபவர்களுக்குச் சந்தர்ப்பத்திற்கேற்ப 'தவக்குல்' கொள்வது குறித்து அன்னார் (அலை) அறிவுரை வழங்கி வந்தார்கள்.

இதன்படி ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் மாஸ்டர் நஸீர் ஹுஸைன் ஸாஹிப் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

'அல்லாஹ் பலவீனமானவன் என்று எண்ணாதீர்கள். அவன் பேராற்றல் மிக்கவன் ஆவான். நீங்கள் ஏதேனும் ஒரு காரியத்தில் அவன் மீது முழு நம்பிக்கை வைத்தால், அவன் நிச்சயமாக உங்களுக்கு உதவுவான்; அவன் தானே கூறியிருப்பது போன்று, 'வமன் யதவக்கல் அலல்லாஹி ஃபஹுவ ஹஸ்புஹ்' (அத்-தலாக்: 4)

'எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ்வே போதுமானவன் ஆவான்."

(ரிவாயாத் அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 184)

நற்பேறு பெற்ற மக்களின் குணங்களை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'ஒரு நிலையோ தவக்குல்' என்பதாகும். அவர்கள் அதில் மிகவும் உறுதியாக நிலைநிறுத்தப்படுகிறார்கள். அவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்குத் அந்த தெளிந்த நீரூற்று ஒருபோதும் கிடைக்கவே முடியாது. இன்னும் கூறப்போனால், அது அவர்களுக்கு இனிமையாகவும், பொருத்தமானதாகவும் ஆக்கப்படுகிறது. மேலும், இறை ஞானத்தின் ஒளியானது அவர்களை எவ்வாறு தாங்கிப் பிடிக்கிறது? என்றால், பல சமயங்களில் பலவிதமான வறுமையிலும், வழக்கமான உலகக் காரணிகளில் இருந்து முற்றிலும் தாங்கள் விலகியிருப்பதைக் கண்டபோதிலும், அவர்கள் அளவற்ற மன மகிழ்ச்சியுடனும், விசாலமான மனதுடனும் வாழ்வைக் கழிக்கின்றார்கள். மேலும், ஆயிரக்கணக்கான பொக்கிஷங்கள் தங்களிடம் இருப்பது போல மகிழ்ச்சியான நிலையில் நாட்களை கடக்கின்றார்கள். மேலும், எந்த வசதிகளுக்கு அவர்கள் பழகியிருந்தார்களோ அவை கிடைக்காத போதிலும், அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்துள்ளவர்கள், ஆயிரக்கணக்கான பொக்கிஷங்கள் தங்களிடம் இருப்பதைப் போன்று பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்வைக் கழிக்கின்றனர். 'அவர்களுடைய முகங்களில் செழுமையின் அதாவது செல்வத்தின் புத்துணர்ச்சி தென்படுகிறது. மேலும், செல்வம் படைத்தவராக இருப்பதற்கான உறுதியான மனநிலை காணப்படுகிறது. வறுமையான நிலையிலும் சிறப்பான பரந்த உள்ளத்துடனும், முழுமையான உறுதியுடனும் தமது கருணையாளனான எஜமானன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள்.' (பராஹீனே அஹ்மதிய்யா, பகுதி 4, ரூஹானீ கஸாயின், தொகுதி 1, பக்கம் 538, அடிக்குறிப்பு எண் 3)

அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கும் என்றால், பின்னர் அவர்கள் நெருக்கடிகள் மற்றும் துன்பங்களிலும் கூட அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்கிறார்கள்; அவனை விட்டு விலகி சென்று விடுவதில்லை. என்ன உள்ளது? என்ன இல்லை? எனத் தெரியவில்லையே? என்ற எண்ணம் அவர்களுக்கு வருவதில்லை. சோதனையா அல்லது தண்டனையா? எதுவாயினும் சரியே! முழுமையான நம்பிக்கை அல்லாஹ் மீது இருக்கின்றது; மேலும், அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றி வருகின்றனர் என்றால், பின்னர் நிச்சயமாக அல்லாஹ் தனது அருட்கொடைகளை வழங்குகிறான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் மீது தவக்குல் வைக்கக் கூடியவர்களும், அவன்பால் குனிபவர்களும் ஒருபோதும் வீணாகுவதில்லை. எந்த நபர் தனது சொந்த முயற்சிகளில் மட்டுமே இருக்கின்றாரோ அவருக்கு இழிவைத் தவிர வேறு என்ன கிடைக்க முடியும்?

இந்த உலகம் படைக்கப்பட்டதிலிருந்து அல்லாஹ்வின் நடைமுறை எப்போதுமே இதுவாகத்தான் இருந்து வருகிறது: அதாவது, எவர்கள் உலகை விட்டு விடுகிறார்களோ, அவர்கள் அதனை பெறுகின்றனர்; எவர்கள் அதற்குப் பின்னால் ஓடுகிறார்களோ, அவர்கள் அதிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ்வுடன் தொடர்பு வைக்காமல் இருப்பவர்கள் வஞ்சகத்தாலும், தந்திரத்தாலும் எதையாவது சில நாட்களுக்கு அடைந்து விட்டாலும் கூட, அது பயனற்றதாகும். உலகத்தை அடைவதற்காக பொதுவாக மக்கள் ஏமாற்று வேலையையே செய்கின்றனர்; (பிறரை) ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். எனவே முடிவில் அவர்களுக்கு கடுமையான தோல்வியையே சந்திக்க நேரிடுகிறது. மார்க்கத்திற்கு எதிரில் உலகத்தைப் பற்றிச் சற்றும் பொருட்படுத்தாதவர்களே இஸ்லாத்தில் சிறந்த மனிதர்களாக வாழ்ந்து சென்றுள்ளனர்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்தியாவில் குதுபுத்தீன் (ரஹி) மற்றும் முஅய்னுத்தீன் (ரஹி) போன்ற இறை நேசர்கள் வாழ்ந்து சென்றுள்ளனர். அவர்கள் மறைவான இறைவனை வணங்கினர்; ஆனால், இறைவன் அவர்களின் கண்ணியத்தை வெளிப்படுத்தி விட்டான்.

அடுத்து, அன்னார் (அலை) ஒரு முறை எடுத்துரைக்கின்றார்கள்: நாம் பட்டாலாவில் ஒரு பீர்ஸாதாவைக் கண்டோம்; அவர் தனது நிலத்தின் வழக்குகளுக்காக கறை படிந்தவராக ஓர் அதிகாரிக்கு பின்னால் சுற்றிக் கொண்டிருந்தார்.

அதாவது டெப்டி என்ற பதவியில் இருந்த ஓர் அரசு அதிகாரிக்கு பின்னால் தமது வழக்குகளுக்காக அல்லது சொத்தை அடைவதற்காக சுற்றிக் கொண்டிருந்தார்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் ஆச்சரியம் கொள்கிறேன். அந்த நபரிடம் உண்மையான நன்மை இருந்திருக்கும் என்றால் - நாங்கள் பீர்மார்களின் சந்ததிகள் ஆவோம் என்று தன்னைத் தானே அந்த நபர் அழைத்துக் கொள்கிறார். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அவரிடத்தில் உண்மையான நன்மை இருந்திருக்கும் என்றால், மேலும் அவர் இறைவன் மீது தவக்குல் கொண்டவராக இருந்திருந்தால், பின்னர் இப்படிப்பட்ட அசுத்தங்களில் அதாவது அசுத்தமான மற்றும் அழுக்கான விஷயங்களில் அந்த நபர் எப்படி விழுந்திருப்பார்.

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

(மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 212 - 213, பதிப்பு 2022-ம் ஆண்டு)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எந்த அளவுக்கு உலகில் பாவங்கள் தோன்றியுள்ளனவோ அவற்றுக்கான காரணம் இதுவே ஆகும். அதாவது, மனிதனுக்கு எந்த அளவிற்கு உலகியல் இன்பம், உலகியல் கண்ணியம் மற்றும் உலகின் செல்வங்களின் மீது நம்பிக்கை உள்ளதோ அதே அளவிலான நம்பிக்கை மனிதனுக்கு மறுமையின் மீது இல்லை. இதன் காரணமாகவே மனிதன் பாவத்தில் விழுகின்றான். மேலும், அவன் தனது கட்டுப்பாட்டில் இருக்கின்ற விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் முற்றிலும் தங்கத்தால் நிறைந்த பெட்டியின் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்கின்றானோ அப்படி அவன் இறைவன் மீது நம்பிக்கை வைப்பதில்லை.

மக்கள் உலக அரசாங்கத்திற்கும், உலக ஆட்சியாளர்களுக்கும் பயப்படுகின்றனர்; 'முதாஹினா' அதாவது போலியான முகஸ்துதி, நயவஞ்சகப் புகழ்ச்சி செய்து வாழ்கிறார்களே தவிர, அவர்கள் அல்லாஹ்வுக்கு அவ்வாறு அஞ்சுவதில்லை. இதற்கான காரணம் என்ன? இதன் காரணம் என்னவெனில், உலகத்தில் மனிதனின் கண்முன்னே தோன்றும் வெளிப்படையான காரணிகள் மற்றும் ஏற்பாடுகள் அவர்களின் பார்வையில் எவ்வளவு உறுதியானவையாகத் தெரிகின்றன என்றால் மார்க்க கொள்கைகள் அவர்களுக்கு முன்னால் ஒன்றுமற்றவை ஆகும்.
(நுஸ்லுல் மஸீஹ், ரூஹானி கஸாயின், பாகம் 18, பக்கம் 468)

உலகியல் காரணிகள் கண்களுக்குத் தெரிகின்றன. ஆனால், கொள்கைகள் மற்றும் அல்லாஹ்வின் மீதான ஈமான் முற்றிலும் ஒரு பொருட்டாகவே இருப்பதில்லை. அல்லாஹ்வின் மீது 'முழுமையான நம்பிக்கையே இல்லாதபோது, நாம் ஒவ்வொரு உறுதிமொழியிலும் திரும்பத் திரும்பக் கூறும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவதற்கான சிந்தனையே இல்லாதபோது, இப்போது குத்தாமுல் அஹ்மதிய்யா நடைபெறுகிறது. அதிலும் இதனை நாம் மீண்டும் கூறுவோம். அப்படியானால், பின்னர் இந்தக் கொள்கைகளும், ஈமானின் பலவீனமும் அத்தகைய நபரை மறுவுலகின் அருட்கொடைகளிலிருந்தும் இழப்பிற்குரியவாக ஆக்கி விடும்.

அவர்கள் இந்த உலகமே அனைத்துமாகும் என்று கருதிகின்றனர். மேலும், அதை பெறுவதற்காகவே முயன்று கொண்டிருக்கின்றனர். சிலருக்கு கிடைத்து விட்டது; சிலரோ அதை அடையும் முயற்சியிலேயே இவ்வுலகை விட்டு மறைந்து விட்டனர்; தோல்வியடைந்து விட்டார்கள். அல்லது கிடைத்தது; அதன் பிறகு அது வீணாகி விட்டது; பிறகு அவர்கள் வேதனையில், இவ்வுலகிலேயே பெரும் வேதனையுடன் வாழ்க்கையைக் கழித்தார்கள். அவர்கள் மார்க்கத்திற்குரியவர்களாகவும் இருக்கவில்லை. உலகத்திற்குரியவர்களாகவும் இருக்கவில்லை.

இதைப் பற்றி ஒரு கவிஞர் இவ்வாறு கூறியுள்ளார்: 'நா குதா ஹீ மிலா, நா விஸாலே ஸனம்'

பொருள்: இறைவனும் கிடைக்கவில்லை, நேசித்த இணையின் சந்திப்பும் கிட்டவில்லை.

மக்களை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வருவதிலும், மறுமையைப் பற்றி சிந்திக்க வைப்பதிலும் அன்னாருக்கு எத்தகைய கவலை இருந்து வந்தது? மேலும் எவ்வளவு வேதனையும் இருந்தது? அதற்காக அன்னார் (அலை) எவ்வாறு துஆ செய்து வந்தார்கள்? இதனை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) இறைவனை விளித்து இவ்வாறு கூறி வந்தார்கள்:

'பார்! ஒரு பறவை தன் கூட்டை நோக்கிப் பறந்து வருவதைப் போல, என் ஆன்மா முழுமையான தவக்குலுடன் உன்னை நோக்கிப் பறந்து கொண்டிருக்கிறது. எனவே நான் உனது வல்லமையின் அடையாளத்திற்கு ஆசைப்படுகிறேன்; ஆயினும், எனக்காகவோ அல்லது என் சுய கௌரவத்திற்காகவோ அல்ல. மாறாக, மக்கள் உன்னை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும், உனது பரிசுத்தமான வழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதற்காகவும், நீ அனுப்பியவரைப் பொய்ப்பித்து அவர்கள் நேர்வழியை விட்டுத் தூரமாகி விடக் கூடாது என்பதற்காகவுமே ஆகும். நீயே என்னை அனுப்பினாய் என்றும், எனக்கு ஆதரவாக பெரும் பெரும் அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளாய் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.'
(தர்யாகுல் குலூப், ரூஹானி கஸாயின், பாகம் 15, பக்கம் 511)

அல்லாஹ் தஆலா, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குத் தானே 'முதவக்கில்' (முழுமையாக இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்) என்று பெயர் சூட்டியுள்ளான்.

ஆகவே, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'மஸீஹ் தோன்றுவதற்கான அடையாளமாக எழுதப்பட்டுள்ளது என்னவெனில், அவர் இரண்டு வானவர்களின் இறக்கைகள் மீது தமது உள்ளங்கைகளை வைத்திருப்பார். இது எதைச் சுட்டிக்காட்டுகிறது என்றால், அவருடைய வலது மற்றும் இடது கைகள் அதாவது பகுத்தறிவு சார்ந்த அறிவுகளையும், உள்ளார்ந்த ஒளிகளையும் அடைவதற்கான வழிமுறையாகும். வானுலக பொறுப்பாளர்கள் - எவரிடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ. இதன் பொருள் வானவர்கள் ஆவர். அவர்களின் உதவியுடன் நிகழும்.

பகுத்தறிவு சார்ந்த அறிவுகள் இருக்கின்றன;ஆத்மிக ஒளிகள் இருக்கின்றன ;மற்றும் மார்க்க ஞானங்களுக்கான விஷயங்கள் உள்ளன. இவை இந்த வழிமுறையினால்தான் நிகழும். அதாவது வானவர்களின் உதவியுடன் நிகழும். இது இரு வானவர்களின் மீது கைகளை வைப்பதன் பொருள் ஆகும்: அவர்களின் ஆதாரத்தைக் கொண்டிருப்பார். மேலும் அவர் பள்ளிக்கூடங்களிலிருந்தோ, நூல்களிலிருந்தோ அல்லது ஆன்மீக ஆசான்களிடமிருந்தோ அறிவு பெறாமல், அல்லாஹ் தஆலாவிடமிருந்தே 'லதுன்னீ' வகையிலான ஞானத்தைப் பெறுவார்.

அதாவது அல்லாஹ் தஆலா பிரத்யேகமாகக் கற்பிக்கும் அந்த அறிவைப் பெறுவார். அவருடைய வாழ்க்கைத் தேவைகளுக்கும் அல்லாஹ்வே பொறுப்பாளனாகவும், ஏற்பாட்டாளனாகவும் இருப்பான்.' உதாரணமாக, பத்து வருட காலமாக 'பராஹீனே அஹ்மதிய்யா' நூலிலிருந்து....

அன்னார் (அலை) பராஹீனே அஹ்மதிய்யாவின் உதாரணத்தை வழங்கி கூறினார்கள்:

'இந்த எளியவனைக் குறித்து பராஹீனே அஹ்மதிய்யாவில் 'இன்னக்க பி-அஃயுனினா ஸம்மய்துக்கல் முதவக்கில வ அல்லம்னாஹு மில் லதுன்னா இல்மா' என்ற இந்த இல்ஹாம் முன்பே அச்சாகியுள்ளது.

பொருள்: நிச்சயமாக நீர் எமது பார்வையில் இருக்கிறீர்; நாம் உமக்கு முதவக்கில் என்று பெயரிட்டோம், மேலும் உமக்கு எமது தரப்பிலிருந்து ஞானத்தைக் கற்பித்தோம்...

பல நபிமொழிகளாலும், திருக்குர்ஆனாலும் நிரூபிக்கப்பட்ட உண்மையாதெனில், **எவர் ஒருவர் இறைவனை முழுமையாக சார்ந்திருத்தல் மற்றும் முழுமையான தவக்குலின் நிலையை உருவாக்கிக் கொள்கிறாரோ, அவருக்கு வானவர்கள் சேவகர்களாக்கப்படுகின்றனர்;** ஒவ்வொரு வானவரும் தமது அந்தஸ்திற்கு ஏற்ப அவருக்குப் பணிவிடை புரிகின்றனர்.' (இஸாலாயே-அவ்ஹாம், இரண்டாம் பாகம், ரூஹானி கஸாயின், தொகுதி 3, பக்கம் 476)

ஒரு நாள் அவையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அங்கு 'தவக்குல்' பற்றிய பேச்சு தொடங்கியது. அப்போது, அன்னார் (அலை) கூறினார்கள்:

நான் என் இதயத்தில் ஒரு விசித்திரமான நிலையை உணர்கிறேன். உதாரணமாக, 'கடும் புழுக்கமும், வெப்பமும் உச்சக்கட்டத்தை அடையும்போது, தற்போது மழை பொழியும் என்று மக்கள் உறுதியாக நம்புகின்றனர். அதே போன்று, எனது பணப்பெட்டி காலியாக இருப்பதை நான் காணும்போது அதாவது என்னிடம் எந்தக் கஜானாவும் இல்லை; எதுவுமே இல்லை என்று நான் காணும்போது இப்போது இது நிரம்பிவிடும் என்று எனக்கு அல்லாஹ்வின் அருளின் மீது உறுதியான நம்பிக்கை ஏற்படுகிறது. மேலும், அவ்வாறே நடக்கவும் செய்கிறது.

மேலும், அல்லாஹ் தஆலாவின் மீது ஆணையிட்டு அன்னார் (அலை) கூறினார்கள்:

என் பணப்பை அதாவது சட்டைப்பை அல்லது பணப்பை காலியாகும்போது, அல்லாஹ் மீதான தவக்குலினால் எனக்குக் கிடைக்கும் ஆர்வம், இன்பத்தின் நிலையை என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியாது.என்னிடம் எதுவுமே இல்லாதபோது, அல்லாஹ் மீதான எனது தவக்குல் மேலும் அதிகரித்து விடுகிறது; மேலும், எனது பணப்பைகள் நிரம்பியிருப்பதை விட அந்த

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

நிலையே அதிக அமைதியையும், நிம்மதியையும் தரக்கூடியதாக இருக்கிறது.' (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 297, பதிப்பு 2022)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த கூற்றை விளக்கியவாறு எழுதுகின்றார்கள்:

ஃபக்கீர்மார்களின பணப் பை என்பது பொதுவாகக் காலியாகவே இருக்கும். அதாவது ஃபக்கீர்கள் செல்வத்தைச் சேமித்து வைப்பதில்லை. தங்களிடம் உள்ளவற்றை மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவதால் அவர்களின் கருவூலம் அதாவது பாக்கெட்டுகள் காலியாகவே இருக்கின்றது. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தவக்குலின் மகிமையைப் பாருங்கள்! எப்படி ஒரு புத்திசாலி விவசாயி தனக்கு மீண்டும், மீண்டும் ஏற்பட்ட அனுபவத்தால் கிணறுகளைப் பற்றி, 'தற்போதுள்ள அதன் நீர் வற்றிப்போக நேரிடும்போது, அதன் அடியில் உள்ள நீரூற்றுகள் தானாகவே திறந்து கிணறு மீண்டும் நீரால் நிரம்பிவிடும்' என்று உறுதியாக நம்பிக்கை கொள்கிறார்.. கிணற்றைத் தோண்டிய பின், சில நேரங்களில் நீர் முழுமையாக இறைக்கப்பட்டுக் காய்ந்துபோகும்; ஆனால் பிறகு மெல்ல மெல்ல மீண்டும் அதில் நீர் சேரத் தொடங்கி விடும்.'

'இதேபோன்று, இங்கே என் பாக்கெட் காலியானால், வானத்தின் மறைமுகமான கரமானது அதை மீண்டும் நிரப்பிவிடும்; அல்லாஹ் என்னிடம் எந்தப் பணியை ஒப்படைத்துள்ளானோ அதில் எந்தத் தடையும் ஏற்படாது' என்ற இந்த அசைக்க முடியாத நம்பிக்கையால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உள்ளமும் நிறைந்திருந்தது. இந்த உதவியின் நிலையைப் பற்றியே 'அல்லாஹ் ஆரம்பத்திலேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இந்த இல்ஹாமில் கூறியிருந்தான்:

'அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு'. பொருள்: தன் அடியானுக்கு அல்லாஹ் போதுமானவன் இல்லையா?.

உண்மை என்னவென்றால், இந்த இறை இல்ஹாமானது ஆரம்பம் முதல் இறுதி வரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது கருணையின் மேகமாக மாறி சூழ்ந்திருந்தது.' (ஸீரத்தே தய்யிபா - ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் எம்.ஏ. ஸாஹிப் (ரலி) அவர்கள், பக்கம் 146)

அன்னாரின் வாழ்க்கையில் இருந்த தவக்குல் தொடர்பாக மற்றொரு நிகழ்வும் காணப்படுகிறது. பராஹீனே அஹ்மதிய்யா நூலின் அச்சுப் பணி தாமதமானது தொடர்பாக, கபூர்தலா சமஸ்தானத்தின் கண்ணிய மிக்க அதிகாரியாக இருந்த ஹாஜி முஹம்மது வலியுல்லாஹ் ஸாஹிப் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

'கண்ணியத்திற்குரியவரின் முந்தைய கடிதத்தில் எந்த அளவுக்குக் கொதிப்பும், கசப்பும் நிறைந்திருந்தது. அதாவது 'பராஹீனே அஹ்மதிய்யா' நூல் வெளியீடு தாமதமானபோது அவர் கடிதம் எழுதினார். அதை வெளியிடுவதற்காக அவர் பணம் கொடுத்திருந்தார். அந்நூல் அவரிடம் போய்ச் சேராதபோது....அன்னார் (அலை) அதனைக் குறிப்பிட்டு எழுதினார்கள்:

'உங்களுடைய முந்தைய கடிதம் வந்திருந்தது. அதில் அந்த அளவுக்குக் கொதிப்பும், கசப்பும் நிறைந்திருந்தது' என்றும், 'கண்ணியத்திற்குரிய உங்கள் மனதில் எழுந்த தப்பெண்ணமானது குழப்பம் மற்றும் சீர்கேட்டின் எல்லைக்கே சென்றுவிட்டதற்கான கெட்ட வாசனை அடிக்கக்கூடிய அளவுக்கு முரட்டுத்தனமானதும், கடினமானதுமான சொற்கள் அதில் இருந்தன' என்றும் அன்னார் (அலை) குறிப்பிட்டார்கள். நீங்கள் மிகுந்த கோபத்தில் கடிதம் எழுதியிருந்தீர்கள்; உங்கள் கடிதத்திலிருந்து அந்தக் கோபம் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது தெளிவாகத் தெரிந்தது.

அன்னார் (அலை) கூறினார்கள்:

புத்தகத்தை வாங்குதல்-விற்றல் என்ற தொடர்பு மட்டும் இல்லாதிருந்தால், உங்கள் பேனாவிலிருந்து இத்தகைய வார்த்தைகள் வெளிப்பட்டிருக்கும் என்று ஒருபோதும் எதிர்பார்க்கப்பட்டிருக்காது. நீங்கள் பணம் கொடுத்திருந்தீர்கள். அதனால்தான் நீங்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளை எழுதினீர்கள். ஏன் தாமதமானது? என்பதை உங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஆகவே, இப்படிப்பட்ட ஒரு துரதிர்ஷ்டவசமான பந்தமானது தங்களைப் போன்ற ஒரு பெரியவரின் மனதை நிலைகுலையச் செய்துவிட்டது. அதாவது குழப்பமடையச் செய்துவிட்டது என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது. மேலும் இந்த நிலை குலைவும், உள்ளத்து அமைதியின்மையும் எங்கு போய் முடியுமோ என்று இன்னும் தெரியவில்லை. அது எவ்வளவு தூரம் நீடிக்கப் போகிறதோ!

இந்த எளியவனின் நிலை என்னவென்றால், இந்த அனைத்து விவகாரமும் சர்வ வல்லமையுள்ள இறைவனின் திருநாமத்தைத் தவிர வேறு எவரின் மீதான நம்பிக்கையினாலும் இல்லை. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை உள்ளது. எனவே இந்த வேலை நடைபெறுகிறது. இன்ஷா அல்லாஹ்! நிகழ்ந்து விடும். ஆனால், வழியில் சில தடைகள் வருகின்றன; அவற்றில் எந்த அழுத்தமும் இல்லை. என்னால் செய்ய முடியாது. எனவே, இவ்வளவு பெரிய பொறுமையின்மையை நீங்கள் காட்டுகிறீர்களே? இதை உலகத்திற்கு அல்லவா நீங்கள் காட்ட வேண்டும்?

எவ்வாறாயினும் அன்னார் (அலை) கூறினார்கள்:

எனவே, இந்தச் சூழ்நிலையில் மிகச் சிறந்த வழி என்னவென்றால், இந்த விற்பனையை ரத்து செய்து, நீங்கள் அனுப்பிய தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்வதே ஆகும். அதாவது, கொடுக்கல் வாங்கல் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, அனுப்பிய பணத்தைத் திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு இவ்வளவு பெரிய கவலை உள்ளது; மேலும், ஒருவேளை நான் உங்கள் பணத்தை ஏப்பம் விட்டுவிட்டேனோ என்ற எண்ணமும் உங்களிடம் உள்ளது. உங்கள் மனதிற்கு குளுமையும், ஆறுதலும் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். நீங்கள் இதைத் திரும்பப் பெற்றுக் கொண்டால், ஒருவேளை உங்கள் இயல்பு குளுமை அடைந்து விடலாம்; மேலும், கோபம் தணிந்து விடலாம்.

ஏனெனில், எப்படியும் பிரியக் கூடிய சில தீர்ஹம்கள் பிரிந்து சென்றது உங்கள் இயல்பை ஊசலாட்டம், வருத்தம், கவலை மற்றும் வியப்பில் ஆழ்த்தியிருப்பதைத் தவிர இந்த ஒட்டுமொத்த ஆத்திரத்திற்கும் வேறு எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த நோக்கத்துடனேயே இக்கடிதம் அனுப்பப்படுகிறது: இந்த அளவுக்குக் கடுமையானதும், தகாததுமான சொற்களுக்குக் காரணம் நான் புரிந்துகொண்டதுதான் என்றால், அந்தத் தொகையைப் பற்றி எனக்குத் தெரிவியுங்கள். நீங்கள் அனுப்பிய பணத்தைத் திருப்பிச் செலுத்தி, நீங்கள் பேசுவது போன்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் 'நாக்கைக் கட்டுப்படுத்தும்' பரிகாரம் செய்யப்பட வேண்டும்..."அதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்' என்கிற நம்பிக்கையாளர்களின் அடையாளத்தின் நற்பேறு தங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

அதாவது, நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் இந்த விதமான பேச்சுகள் நிறுத்தப்பட வேண்டும்; மேலும் இது போன்ற பேச்சுகளைப் பேசாமல் இருப்பதே உண்மையான நம்பிக்கையாளர்களின் நற்பண்பாகும்.

எனவே, பணத்தைத் திரும்பத் தருவதன் மூலமாகவே உங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்றால், அதாவது நீங்கள் நம்பிக்கையாளர்களுக்குரிய பண்புகளை மேற்கொள்ளும் பொருட்டு நான் உங்களுடைய பணத்தைத் திரும்பத் தருகிறேன்.'

மேலும் அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

'நீங்கள் ஸுர்மா சஷ்மா ஆர்யா எனும் நூலைப் பார்த்திருந்தால் உங்களுக்குத் தெரிந்திருக்கும்; 'பராஹீன்' அச்சிடப்படுவதில் ஏற்படும் தாமதத்தினால் எவருக்கேனும் அதிருப்தி ஏற்பட்டு, தனது தொகையைத் திரும்பப் பெற விரும்பினால் அவர்கள் தகவல் தெரிவித்தால் அத்தகைய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தொகை திரும்பத் தரப்படும் என இந்த எளியவன் முன்பே அறிவித்திருந்தேன். ஸுர்மா சஷ்மா ஆர்யா எனும் நூலை நான் எழுதிக்கொண்டிருக்கிறேன்; இதன் காரணமாக 'பராஹீனே அஹ்மதிய்யா' வெளிவருவது தாமதமாக கூடும்; எனவே யாருக்கேனும் அவசரம் இருந்து பணத்தைத் திரும்பப் பெற விரும்பினால் பெற்றுக் கொள்ளலாம் என்று முன்பே நான் அறிவித்து விட்டேன்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'தப்பெண்ணம் கொண்டு, வாயிலிருந்து அசுத்தமான வார்த்தைகளைப் பேசுபவர்களால் நமக்கு எந்தவொரு தீங்கும் செய்து விட முடியாது என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். அவர்கள்



தாங்களாகவே தப்பெண்ணம் கொண்டு, 'இம்மையும் பறிபோனது; மறுமையும் பறிபோனது என்பதை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக ஆகிவிடுகின்றனர்.

இந்த காரியங்கள் அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனிடமிருந்தே அமைந்துள்ளன; அவனே இதனை நல்லபடியாகவும், சிறப்பாகவும் நிறைவு செய்வான். உங்கள் பணம் எனக்குத் தேவையில்லை. இது அல்லாஹ்வுடைய பணியாகும். அவன் இதை முழுமையாக நிறைவேற்றுவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்று உங்களுக்குத் தோன்றுவது போன்ற எண்ணமே மனிதகுலம் முழுமைக்கும் தோன்றினால் அப்போதும் கூட ஒரு துளி அளவு கூட எமக்கு தீங்கிழைக்க முடியாது. காரிருள் சூழ்ந்த காலத்தில் எம்மை நியமித்த அந்தப் பேரருளாளனான இறைவன் எம்முடன் இருக்கிறான்; அவனே எமக்கு போதுமானவன் ஆவான்.'

ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலீ ஸாஹிப் இர்பானீ (ரலி) அவர்கள் இந்தக் கடிதத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றார்கள்:;

'இந்தக் கடிதத்தின் மூலம், அல்லாஹ்வின் மீது அன்னாருக்கு இருந்த தவக்குலையும் அறிய முடிகிறது; இதனால்தான் அல்லாஹ்வின் வஹீ அன்னாருக்கு 'முத்தவக்கில்' (அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருப்பவர்) என்ற பெயரையும் சூட்டியது.

சுருங்கக் கூறின், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் பரிசுத்தமான வாழ்வின் கண்ணாடியாக இக்கடிதம் உள்ளது.' (மக்தூபாத்தே அஹ்மது, பாகம் 1, பக்கம் 399 400, கடித எண் 5, ஹாஜி முஹம்மது வலியுல்லாஹ் சாஹிப் அவர்களுக்கு எழுதியது)

துஆ மற்றும் தவக்குல் குறித்து அன்னார் (அலை) கூறினார்கள்:

'அனைத்துச் சிக்கல்களும் துஆ மூலமே தீர்ந்து விடுகின்றன.'

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: 'அனைத்துச் சிக்கல்களும் துஆவின் மூலம் தீர்ந்து விடுகின்றன. எவருக்கேனும் நன்மையை நாடுதல் என்று ஒன்று நம் கையில் உள்ளது என்றால் அது என்ன? அது துஆ எனும் ஒரு கருவி மட்டுமே ஆகும். அதனை இறைவன் நமக்கு வழங்கியுள்ளான். நண்பனுக்காகவோ அல்லது எதிரிக்காகவோ கருப்பை வெள்ளையாகவோ, வெள்ளையைக் கருப்பாகவோ மாற்ற நம்மால் முடியாது. நம் அதிகாரத்தில் ஓர் அணுவளவும் இல்லை; ஆனால், இறைவன் தனது அருளால் நமக்கு வழங்கியதைத் தவிர வேறெதுவும் இல்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்: மனிதனுக்கு துன்பங்களின் போது நிம்மதியின்மையோ ஏற்படுகிறது. எனினும் இறைவன் மீதான முழுமையான நம்பிக்கையை ஒருபோதும் கைவிட்டுவிடக் கூடாது. இத்தகைய நிம்மதியின்மைகள் ஏற்படுவதோ மனித நல்லொழுக்கங்கள் மற்றும் ஆன்மிக படித்தரங்களின் முழுமைக்கு மிகவும் அவசியமானதாகும். எனினும், மனிதன் விரக்தியை நெருங்கவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நிம்மதியின்மையோ ஏற்படுகிறது. காரியம் விரைவாக முடிய வேண்டும் என்ற பதற்றம் ஏற்படுகிறது; ஆனால் அதற்காக மனிதன் நிராசையடைந்து, அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையைக் கைவிட்டுவிடக் கூடாது.

ஏனெனில், விரக்தி என்பது நிராகரிப்பாளர்களின் பண்பாகும். மனிதனுக்குப் பல்வேறு வகையான எண்ணங்கள் நிம்மதியின்மைக்கான சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன; ஆனால் ஈமான் அந்தச் சந்தேகங்களை அகற்றி விடுகிறது. மனித இயல்பு நிம்மதியின்மையை விலைக்கு வாங்குகிறது (ஈர்க்கிறது). மேலும் ஈமான் அதனை விரட்டியடிக்கிறது.

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 271-272, பதிப்பு 2022)

அதாவது, மனிதனின் இயற்கை சுபாவத்தால் அமைதியின்மை உண்டாகிறது; ஆனால் ஈமான் முழுமையாக இருக்கும்போது அந்த அமைதியின்மை நீங்கிவிடுகிறது. வெற்றியின் மீது உறுதி ஏற்படுகிறது. மனித தேவைகளினால் அமைதியின்மை உருவாகிறது; ஆனால் ஈமான் முழுமையானதாக இருந்தால் அது அதனை விரட்டியடிக்கிறது.

துஆக்களின் பக்கம் கவனமூட்டியவாறும், அல்லாஹ் மீதான தவக்குலை உருவாக்குமாறும் அறிவுரை வழங்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஆன்மாவைச் சீர்திருத்துவதற்கும், இறுதி முடிவு நன்மையாக அமைய பெறுவதற்கும், நன்மைகள் பெறுவதற்கான நற்பேறைப் பெறுவதற்குமான இரண்டாவது அம்சம் துஆ ஆகும். இதில் எவர் எந்த அளவுக்கு அல்லாஹ் மீது நம்பிக்கையும், உறுதியும் வைத்து, இந்த வழியில் சோர்வடையாத பாதத்தை வைப்பாரோ, அந்த அளவிற்குச் சிறந்த பலன்களும், கனிகளும் கிடைக்கும். அனைத்துச் சிரமங்களும் நீங்கிவிடும். துஆ செய்பவர் இறையச்சத்தின் உயர்ந்த நிலையை அடைவார்.

(மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 51, பதிப்பு 2022)

அன்னாருடைய தவக்குலின் அம்சத்தை விவரித்தவாறு, அன்னாரின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

'வழக்கிற்கான தயாரிப்பில் அன்னார் (அலை) முழுமையான உழைப்பும், முயற்சியும் செய்து வந்தார்கள். ஆயினும், வெளிப்புற காரணிகள் மற்றும் வழிகள் மீது ஒருபோதும் நம்பிக்கை வைக்காமல், துஆக்களையே சார்ந்து இருந்தார்கள். எப்போதும் அல்லாஹ் தஆலாவின் இருப்பு மட்டுமே அன்னாரின் கவனத்தில் இருந்தது. அவனே வணக்கத்திற்குரியவனாகவும், நாடப்படுபவனாகவும் இருந்தான்; மேலும் அவனையே முழுமையாகச் சார்ந்தும் (தவக்குல்), நம்பிக்கையும் கொண்டிருந்தீர்கள்.'

(ஹயாத்தே அஹ்மது, பாகம் 1, பகுதி 3, பக்கம் 317)

வரலாற்றில் ஒரு நிகழ்வு வந்துள்ளது:

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் தந்தையாரின் நண்பராக இருந்த ஒரு வயதான இந்து பெரியவர், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நபித்துவக் காலத்தில் காதியானுக்கு வந்து, அன்னாரின் நிலைமைகள் மற்றும் தவக்குல் குறித்த நிகழ்வை எடுத்துரைத்தார்.

அதாவது அவர் கூறினார்: 'அவர் பிறப்பதற்கு முந்தைய காலத்தில் இருந்து நான் இருக்கிறேன், அவரை என் கைகளில் வைத்து கொஞ்சி விளையாடியிருக்கிறேன்'. 'விவரம் தெரிந்த நாளிலிருந்தே அவர் மிகவும் நல்லவராகவே இருந்தார்' என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைப் புகழ்ந்தவாறு அந்த இந்துப் பெரியவர் கூறுகிறார். 'அவர் உலக பணிகள் எதிலும் ஈடுபடவில்லை. மற்ற குழந்தைகளைப் போல விளையாட்டுகளில் மூழ்கியிருக்கவில்லை. தீங்கு, குழப்பம், பொய், கெட்ட வார்த்தை பேசுதல் போன்றவை அன்னாரிடம் ஒருபோதும் இருந்ததில்லை.

நானும் என் சமவயதினரும் அவரை மந்தமானவர், சாதாரண மனதுடையவர் மற்றும் அறிவற்றவர் என்று கருதி வந்தோம்; 'இவர் எப்படி குடும்பம் நடத்தப் போகிறார்?' என்று நினைப்போம். என் கைகளில்தான் அவர் வளர்ந்தார்.' ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைப் பற்றி அந்த இந்துப் பெரியவர் கூறுகிறார்:

'ஆனால் அவர் எவ்வாறு வாழ்வார்? வீட்டில் தனியாக இருப்பதைத் தவிர வேறு எந்த வேலையுமே அவருக்கு இருக்கவில்லை. யாரையும் அடிக்கவும் இல்லை, யாரிடமும் அடி வாங்கவும் இல்லை.' இளைஞர்களுக்குச் சண்டை சச்சரவுகள் ஏற்படுவது இயல்பான வழக்கம்; வெளியில் சென்றால் அடிப்பதும், அடி வாங்குவதும் நடக்கும். அதில் பக்குவப்படுவார்கள். ஆனால் இவர் இதில் எதையுமே கற்றுக் கொள்ளவில்லை என்றால் இவர் என்ன செய்வார்? இவர்கள் உலகியல் பார்வையில் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் அவர் கூறுகிறார்:

யாரையும் தவறாகப் பேசியதுமில்லை ; பேச வைத்ததுமில்லை. ஒரு விசித்திரமான, தூய்மையான வாழ்க்கையாக இருந்தது, ஆனால் எங்களின் பார்வையில் அது நல்லதாகத் தோன்றவில்லை.மார்க்க ரீதியாகப் பார்த்தால் அது மிகத் தூய்மையான வாழ்க்கையாக இருந்தது. ஆனால், உலகியல் மனிதர்களான எங்களின் பார்வையில் அது நல்ல வாழ்க்கையாக இருக்கவில்லை. அந்த இந்து பெரியவர் கூறுகிறார்:

'சாதாரணப் பேச்சுக்களை பேசுவதைத் தவிர்த்து, வேறு எங்கும் வருவதோ செல்வதோ கிடையாது. மியான்! உலகில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? நீங்களும் இப்படி இருங்கள்; ஒன்றுமில்லையென்றாலும் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கிற்காகவாவது வெளியே வாருங்கள்' என்று நாங்கள் எப்போதாவது ஏதாவது கூறினால், அவர் ஒன்றும் பேசாமல் புன்னகைத்தவாறு அமைதியாக இருப்பார். 'நீங்கள் அறிவுடன் செயல்படுங்கள்; உண்ணுங்கள்; சம்பாதியுங்கள், ஏதாவது செய்யுங்கள்' என்று நாங்கள் கூறிவந்தோம்.' 'இதைக் கேட்டு அவர் மௌனமாகிவிடுவார்.

அவருடைய தந்தை என்னிடம், நீங்கள் சென்று குலாம் அஹ்மதை அழைத்து வாருங்கள்; அவரிடம்

சிலவற்றை புரியவைப்போம்' என்று கூறுவார். நான் சென்று அவரை அழைத்து வருவேன். தந்தையின் உத்தரவைக் கேட்டு உடனேயே அவர் வந்துவிடுவார்; மேலும், வந்து அமைதியாக அமர்ந்து விடுவார்; மேலும், பார்வையைத் தாழ்த்தி வைத்துக் கொள்வார்.

அவருடைய தந்தை கூறுவார்:

மகனே! குலாம் அஹ்மது! உம்மைப் பற்றி எங்களுக்கு மிகுந்த கவலையும் அச்சமும் எப்போதும் இருக்கிறது. நீர் என்ன சம்பாதித்து சாப்பிடப் போகிறீர்? இப்படி எத்தனை காலம் வாழ்க்கையைக் கழிப்பாய்? ஏதாவது வேலை செய்யுங்கள்; மணப் பெண்ணைப் போல வெட்கப்பட்டுக் கொண்டு எத்தனை காலம் இப்படியே இருப்பீர்? உணவு மற்றும் வாழ்வாதாரத்தைப் பற்றி அக்கறை வேண்டாமா? பாருங்கள்! இந்த உலகம் உழைத்து, உண்கிறது; குடிக்கிறது; வேலைகளைச் செய்கிறது; உமக்குத் திருமணம் நடக்கும்; மனைவி வருவார்; குழந்தைகள் பிறப்பார்கள். அவர்கள் உணவு, உடை மற்றும் தேவைகளைக் கேட்பார்கள். அவர்களின் பொறுப்பு உமது தலையில்தான் இருக்கும்; அவர்களைக் கவனித்துக் கொள்ளும் கடமை உம்முடையதுதான். இந்த நிலையில் உமக்கு திருமணம் செய்து வைக்கவே பயமாக இருக்கிறது. கொஞ்சம் விழித்துக் கொள்! இந்த அலட்சியத்தையும், அதிகப்படியான அப்பாவித்தனத்தையும் விட்டுவிடு. நான் எத்தனை காலம்தான் உம்மோடு இருப்பேன்? பெரிய பெரிய ஆங்கிலேயர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் ஆட்சியாளர்களோடு எனக்குப் பழக்கம் உண்டு; அவர்கள் என்னை மதிக்கிறார்கள். உமக்காக நான் ஒரு சிபாரிசுக் கடிதம் எழுதித் தருகிறேன், நீர் தயாராவீராக; அல்லது நீர் சொன்னால் நானே நேரில் சென்று சிபாரிசு செய்கிறேன்.'

இதற்கு மிர்ஸா குலாம் அஹ்மத் (ஸாஹிப்) எந்தப் பதிலும் சொல்ல மாட்டார். அவருடைய மரியாதைக்குரிய தந்தை மீண்டும் மீண்டும் இதையே கூறுவார். கடைசியாக அவர் பதில் கூறினால், இப்படித்தான் கூறுவார்:

'தந்தையே! அதிகாரிகளுக்கெல்லாம் அதிகாரியாகவும், 'மாலிகுல் முல்க் அஹ்கமுல் ஹாகிமீன்' அதாவது அனைத்துப் பேரரசுகளின் அதிபதியாகவும், தீர்ப்பளிப்பவர்களில் மிகச் சிறந்தவராகவும் இருக்கும் இறைவனின் ஊழியனாகவும், அகிலங்களின் அதிபதியான தன் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவனாகவும் இருக்கும் ஒருவனுக்கு வேறு எவருடைய வேலைக்குத்தான் என்ன தேவை இருக்கிறது? இருந்தாலும், நான் உங்கள் உத்தரவை மீறுபவன் அல்ல; நீங்கள் வேலை பார்க்கச் சொன்னால் நான் பார்க்கிறேன்.'

இந்த பதிலைக் கேட்டு மிர்ஸா குலாம் முர்தஸா ஸாஹிப் மௌனமாகி விடுவார்; பிறகு, 'சரி மகனே!, நீ செல்! உனது தனிமை அறையை கவனித்துக் கொள்' என்று கூறுவார். அவரும் சென்று விடுவார்.

அந்த இந்துப் பெரியவர் கூறுகிறார்:

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

அங்கிருந்து சென்ற பிறகு அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அங்கிருந்து சென்று விடுவார்கள்; அன்னார் (அலை) அப்போது வாலிப பருவத்தில் இருந்தார்கள்; 'என்னுடைய இந்த மகன் ஒரு மௌலவியாகத்தான் இருப்பார்; இவருக்காக ஏதாவது ஒரு மஸ்ஜிதை நானே தேடிப் பிடித்துத் தருகிறேன்; அதில் இவர் பத்து இருபது மணங்கு (அதாவது தானிய அளவை) தானியமாவது சம்பாதித்துக் கொள்வார். ஆனால், நான் என்ன செய்வேன்? இவர் அந்த மௌலவி வேலைக்குக் கூட தகுதியற்றவராக இருக்கிறாரே! எங்களுக்குப் பிறகு இவர் எவ்வாறு வாழ்வைக் கழிப்பார்? இவர் மிகவும் நல்லவர்; சாதுவானவர்; ஆனால் காலம் இதுபோன்ற மனிதர்களுக்கானதாக இல்லையே! தந்திரமான நபர்களுக்கானதாக இருக்கிறது!'

பின்னர் கண்ணீர் மல்கியபடி அந்தத் தந்தை கூறுவார்: 'பரிசுத்தமான குலாம் அஹ்மதின் நிலைமை எங்கே! நமது நிலைமை எங்கே! இந்த மனிதர்; மண்ணுலகிற்குரியவர் அல்ல; விண்ணுலகைச் சார்ந்தவர்; மனிதர் அல்ல, வானவர் ஆவார்.'

இதைச் கூறிவிட்டு, இந்தச் சம்பவத்தை விவரித்துக் கொண்டிருந்த அந்த முதியவரான இந்துவின் கண்களும் குளமாகி அவர் அழ ஆரம்பித்தார். மேலும், மிர்ஸா குலாம் முர்தஸா அவர்களின் நண்பராக இருந்த, மிகவும் வயதான, அந்த முதியவர் கூறினார்:

இப்போது மிர்ஸா குலாம் முர்தஸா அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் - மிர்ஸா குலாம் முர்தஸா அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தந்தையார் உயிருடன் இருந்திருந்தால், 'இவருடைய இந்த எழுச்சியையும் முன்னேற்றத்தையும் பார்த்திருப்பாரே!'

அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தந்தையார், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்வின் தற்போதுள்ள இந்த எழுச்சியை அன்னார் கண்டிருப்பாரே!

அதாவது 'உலகின் அறிவுஜீவிகளும், மௌலவிகளும், முல்லாக்களும் இவருடைய வாசலில் கையேந்தி நிற்கின்றனர்; மேலும், இறைவன் இவருக்கு இந்த அந்தஸ்தை வழங்கியுள்ளான்; அனைவருடைய அறிவும், கல்வியும் இவருக்கு முன்னால் ஒன்றுமற்றதாகும் என்ற அளவிலான தனது வல்லமையின் காட்சியை அவர் வெளிப்படுத்தியுள்ளார்; இதனை அன்னார் கண்டிருப்பாரே.' (தத்கிரத்துல் மஹ்தி, பக்கம் 300 - 302)

இன்று அன்னார் இதைப் பார்த்திருந்தால், 'இறைவன் மீது நம்பிக்கை வைத்து, இறைவனுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்த இந்த நபரிடமிருந்து இன்று உலகமே ஞானத்தைக் கற்றுக் கொள்கிறது' என்பது அன்னாருக்கு தெரிய வந்திருக்கும் என்பதை இப்போது இந்த இந்துப் பெரியவர் ஒப்புக் கொள்கிறார்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'ஒருமுறை எதிர்பாராதவிதமாக நமக்கு ஐம்பது ரூபாய் தேவைப்பட்டது. ஃபக்கீர்மார்களும், இறைவன் மீது தவக்குல் கொண்டவர்களும் சிலமுறை இதுபோன்ற நிலைமையை கடந்து செல்வதுண்டு. அந்த நேரத்தில் எம்மிடம் எதுவும் இருக்கவில்லை. எனவே, நாம் காலையில் உலாவுவதற்காகச் சென்றபோது, அந்தத் தேவையைக் குறித்த எண்ணமானது, இந்தக் காட்டில் துஆ செய்யுங்கள் என்ற உத்வேகத்தை வழங்கியது. எனவே நாம் ஒரு மறைவான இடத்திற்குச் சென்று, காதியானிலிருந்து மூன்று மைல் தொலைவில் படாலா திசையில் அமைந்துள்ள அந்த நதியின் கரையில் துஆ செய்தோம். நாம் துஆ செய்து முடித்த உடனே ஓர் இல்ஹாம் வந்தது. அதன் பொருள் இதுவாகும்:

'பார், உனது துஆக்களை நான் எவ்வளவு விரைவாக ஏற்றுக்கொள்கிறேன்'. அப்போது நாம் மகிழ்ச்சியடைந்து, காதியானை நோக்கித் திரும்பி வந்து, 'இன்று நம் பெயருக்கு ஏதேனும் பணம் வந்திருக்கிறதா?' என்று தபால் நிலையத்தில் விசாரிப்பதற்காக கடை வீதியை நோக்கிச் சென்றோம். இது வாதம் செய்வதற்கு முன்னர் நிகழ்ந்த விஷயமாகும். அப்போது லூதியானாவிலிருந்து ஒருவர் ஐம்பது ரூபாய் அனுப்பியுள்ளதாக எழுதப்பட்டிருந்த ஒரு கடிதம் எமக்குக் கிடைத்தது. அநேகமாக அந்தப் பணம் அதே நாளோ அல்லது அடுத்த நாளோ எமக்குக் கிடைத்துவிட்டது.'
(ரூஸூலுல் மஸீஹ், ரூஹானி கஸாயீன், தொகுதி 18, பக்கம் 612)

துஆவினால் பிரச்சினைகள் தீர்ந்து விடுகின்றன என்ற முஸ்லிம்களின் இந்தக் கொள்கையைக் கேட்டு, 'இது அவர்களை மிகவும் பலவீனப்படுத்துகிறது' என்று ஒரு தலைவர் கருதினார்.

அதாவது துஆவினால் பிரச்சினைகள் தீர்ந்து விடுகின்றன என்ற இந்த கொள்கை, அவர்களைச் செயல்படுவதிலிருந்துத் தடுத்து விடுகிறது. மேலும், அவர்கள் எத்தகைய மக்கள் என்றால், அவர்கள் வெறும் துஆவின் பக்கமே கவனம் செலுத்துகின்றனர்; மேலும், காரணிகளைப் பயன்படுத்துவது இல்லை. இதன் காரணமாக அவர்களுடைய நிலைமை பலவீனமடைந்து விடுகிறது என்றும் அவர் கருதினார்.'

இதைக் கேட்டு அன்னார் (அலை) கூறினார்கள்: 'துஆவை மறுப்பவர் இறைவனை மறுப்பவர் ஆவார். ஏனெனில், இறைவனை அறிந்துகொள்வதற்கான ஒரே வழிமுறை துஆ மட்டுமே ஆகும். மேலும், அந்த இறைவனின் இருப்பை விருப்பத்துடனோ விருப்பமின்றியோ ஒப்புக் கொள்ளும் அந்தக் காலம் தற்போது வந்துவிட்டது.'

உண்மையில் எங்கும் நாத்திகமே நிலவுகிறது. இன்றைய அவைகளின் நிலை என்னவென்றால், துஆ, தவக்குல் மற்றும் 'இன்ஷா அல்லாஹ்' என்று சொல்வதை (மக்கள்) ஏளனம் செய்கின்றனர். இந்த விஷயங்களை முட்டாள்தனம் என்கின்றனர். 'இன்றைய நாட்களில் இந்த நிலைமைகள் இன்னும் அதிகரித்துவிட்டன'. இல்லையெனில், இறைவனுடன்

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

அவர்களுக்குச் சிறிதளவேனும் நேசம் இருந்திருந்தால், அவனுடைய பெயரைக் கேட்டு ஏன் எரிச்சலடைய வேண்டும்? எவருக்கு ஒருவருடன் நேசம் இருக்கின்றதோ அவர் எப்படியாவது ஒருவகையில் தன் நேசரின் பெயரை உச்சரித்து விடுவார். அவர்களுடைய பார்வையில் இறைவன் என்பவன் ஒரு பொருட்டே இல்லை என்றால், இப்போது மரணத்தின் வாயில் திறந்தே இருக்கிறது; அதைச் சற்று அவர்கள் மூடிக் காட்டட்டுமே!

வியப்பு என்னவென்றால், இறைவனது இருப்பின் மீது நமக்கு எந்த அளவு நம்பிக்கை இருக்கின்றதோ அதே அளவு மற்றக் கூட்டத்தினர் அவன் மீது அவநம்பிக்கை கொள்கிறது.'அதாவது இறைவனுக்கு எதிரானவர்கள் உள்ளனர்; நாத்திகர்கள் இருக்கின்றனர்'. உண்மையில் இறைவனின் அருள் தேவைப்படுகிறது. அவன் இதயத்தின் பூட்டுகளைத் திறக்காவிட்டால், பின்னர் வேறு யாரால் திறக்க முடியும்? அவன் நாடினால், ஒரு நாய்க்குக் கூட தன் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் அறிவை வழங்கி விட முடியும்; மேலும், மனிதனை அதிலிருந்து நற்பேறு இழந்தவனாக ஆக்கிவிட முடியும். (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 169 170, பதிப்பு 2022)

ஹஸ்ரத் மியான் அல்லாஹ் யார் ஸாஹிப் ஒப்பந்ததாரர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் என்னை அழைத்தார்கள். 'உம்மிடம் கொஞ்சம் மரக்கட்டை உள்ளதா?' என்று கேட்டார்கள். நான், 'ஹுஸூர்! கொஞ்சம் இலந்தை மற்றும் கருவேலம், அரச மரக்கட்டைகள் உள்ளன' என்றேன். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள், 'விருந்தினர் மாளிகைக்குச் சில கட்டில்கள் செய்ய வேண்டியுள்ளது. அவற்றிற்குக் கால்கள் செய்ய வேண்டும்; தேவை உள்ளது' என்றார்கள். நான், 'அரச மரக்கட்டையிலேயே செய்துவிடலாம்' என்று கூறினேன். அங்கிருந்த ஒருவர், 'ஹுஸூர்! அரச மரக்கட்டை பழுதாகி விடும்; அதன் கால்கள் நீண்ட காலம் நீடிக்காது' என்றார்.

அப்போது அன்னார் (அலை) கூறினார்கள்:

'யாருக்காகச் செய்யப்படுகிறதோ அவன் ஏழை அல்ல; அவன் தேவைகள் அற்றவன் ஆவான்.

அதாவது நாம் அல்லாஹ்விற்காகச் செய்கிறோம் என்றால் அது சரிதான். கொஞ்ச காலமாவது பயன்படட்டுமே! தற்போதைய சூழ்நிலைக்கு இதுவே போதுமானது. அன்னார் (அலை) கூறினார்கள்:

முந்தைய ஆடை பாழாகும்போது அவன் புதிய ஆடையைத் தயாரித்து விடுகிறான்; அங்கு எந்தப் பொருட்டும் இல்லை'.

அன்னார் (அலை) என்னிடம் இருபது கட்டில்கள் செய்யச் சொன்னார்கள். மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்,'இருபது கட்டில்கள் செய்து எடுத்து வரும்படி எனக்கு கட்டளை வழங்கினார்கள்.

ஒவ்வொரு பொருளும் என்றாவது ஒரு நாள் பாழாகத்தான் போகிறது. ஆனால், அல்லாஹ்வே மீண்டும் வழங்கக்கூடியவன்; அது பாழானால் அவன் மீண்டும் ஏற்பாடு செய்து தருவான்' என்று மிகுந்த தவக்குலுடன் அன்னார் (அலை) கூறினார்கள். 'எவ்வாறிருப்பினும், இப்போதைக்கு இந்தத் தேவையை நிறைவேற்றுங்கள்' என்றார்கள்.

அவர் மேலும் கூறுகிறார்: நான் இருபது கட்டில்களுக்கான கால்களை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாரானபோது, ஒரு கொல்லரும் அங்கே வந்தார்.மேலும், 'கிராமத்தில் தான் தனித்தவனாக இருப்பதைக் கண்டு துன்புறுத்துகிறார்கள் என அஹ்மதி அல்லாதவர்களிடமிருந்து தனக்கு நேர்ந்த துன்பங்களைப் பற்றி அவர் குறிப்பிட்டார். மேலும், அல்லாஹ் அவர்களின் கடுமைகளிலிருந்து காப்பாற்றட்டும்!' என்று துஆ செய்யுமாறு கூறினார்.

எனது அடைகல்லை அவர்கள் எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். (அதாவது அவர் ஒரு கொல்லர் ஆவார். இரும்பைச் சூடாக்கி அடிப்பதற்குப் பயன்படும் கனமான இரும்புத் துண்டே அடைகல் என்று கூறுவர்) அதனை திருடிக் கொண்டு சென்று விட்டனர். இப்போது என்னால் வேலை செய்ய முடியவில்லை என்று அவர் கூறினார்.

அப்போது அன்னார் (அலை) கூறினார்கள்:

'இறைவன் மீது தவக்குல் வையுங்கள். அல்லாஹ் உங்களுக்கு ஆதரவாளனாகவும், உதவியாளனாகவும் இருப்பான். உறுதியாக நினைவில் கொள்ளுங்கள், எவர் இறைவனுக்கு உரியவராக ஆகிவிடுகிறாரோ, இறைவன் அவருக்கு உரியவனாக ஆகிவிடுகிறான். நீங்கள் அஹ்மதியாக இருப்பதன் காரணமாக உங்களுக்குத் துன்பங்கள் நேரிடுகின்றன என்றால், இன்ஷா அல்லாஹ் அந்தத் துன்பங்கள் நீங்கிவிடும். இன்ஷா அல்லாஹ் உங்கள் தேவைகள் நிறைவடைந்து விடும். நீங்கள் இறைவனைக் கைவிடவில்லையென்றால், அவன் உங்கள் பொருளை கிடைக்கச் செய்து விடுவான். நாமும் (உமக்காக) துஆ செய்வோம்.' (ரிவாயாத் அஸ்ஹாபே அஹ்மத், தொகுதி 4, பக்கம் 465)

அந்த அவையில், அன்னார் (அலை) எங்கு இறைவன் மீதான நம்பிக்கையை தமக்காக வெளிப்படுத்தினார்களோ அங்கு, மற்றொரு நபருக்கும் தவக்குல் மற்றும் துஆ செய்யுமாறு அறிவுறுத்தினார்கள்.

அன்னார் (அலை) தமது உண்மையான ஒரு தொண்டருக்கு வழங்கிய ஓர் அறிவுரையை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பில் கூறுகின்றார்கள். கூறுகின்றார்கள்:

'பைஅல்லாஹ் சக் பகுதியைச் சேர்ந்த ஹாஃபிழ் நூர் முஹம்மது அவர்கள் என்னிடம் எழுத்துப்பூர்வமாகத் இவ்வாறு கூறினார்கள்:

நான் ஹாஃபிழ் ஹாமித் அலீ ஸாஹிப் (ரலி) அவர்களிடம் இருந்து இந்த நிகழ்வைக் கேட்டேன். அதாவது ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

'எப்போதாவது ஏதேனும் ஒரு வழக்கில் அல்லது ஏதேனும் ஒரு வகையில் ஏதேனும் ஓர் ஆட்சியாளரின் முன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், செல்வதற்கு முன் ஏழு முறை ஸூரா ஃபாத்திஹாவை ஓதிக் கொள்ள வேண்டும்; மேலும் ஏழு முறை தன் விரலால் தனது நெற்றியில் 'யா அஸீஸ்' என்று எழுதிக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அல்லாஹ் வெற்றியைத் தருகிறான்...'

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதற்கு விளக்கம் அளித்தவாறு எழுதுகிறார்கள்:

பெரும்பாலும் இது 'அல்லாஹ் அல்லாதவர்களிடமிருந்து தேவையற்றிருத்தல்', மேலும், அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளுதல் ஆகியவற்றின் நிலையை உருவாக்குவதற்காகவே ஆகும்.'

(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பகுதி 2, பதிவு எண் 468, பக்கம் 441 முதல் 442 வரை)

அன்னார் (அலை) இதைக் கூறினார்கள்: அதாவது நீங்கள் இந்த முறையில் துஆ செய்யும்போது, உங்கள் கவனம் அல்லாஹ்வின் பக்கம் இருக்கும்; மேலும் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்கள் மீதான பயம் அகன்றுவிடும்; மேலும், இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ் அருளும் புரிவான்.

வழக்குகளின் தீர்ப்புகள் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'என்னுடைய சொந்த வழிமுறை என்னவென்றால், மிக மிக மோசமான மனிதன் கூட ஒரு வழக்கைத் நடத்தினாலும், அதில் அதிகாரம் 'அல்லாஹ்வுடையதே ஆகும்; அல்லாஹ் என்ன நாடுகிறானோ, அதை அவர் மூலம் தீர்ப்பாக எழுதச் செய்கிறான். மனிதனைச் சார்ந்திருப்பது இணைவைத்தல் ஆகும்; இன்னும் கூறப்போனால், ஓர் ஓநாயிடம் வழக்கு சென்றாலும் கூட, அல்லாஹ் அதற்குப் புரிதலை வழங்கிவிடுவான்.' (மல்ஃபூஸாத், பாகம் 4, பக்கம் 177, பதிப்பு 2022)

அன்னார் (அலை) மீது எண்ணற்ற வழக்குகள் தொடரப்பட்டன; ஆனால் அல்லாஹ் மீது அன்னாருக்கு எந்த அளவிற்கு உறுதியும், தவக்கலும் இருந்தது என்றால், எதிரி வெற்றி பெற்று விடுவான் என்ற ஒரு சூழல் ஒருபோதும் ஏற்படாது என்ற உறுதி அன்னாருக்கு இருந்தது.

இத்தகைய ஒரு நிகழ்வைப் பற்றி ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஒருநாள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸாஹிப், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் வீட்டைச் சோதனையிடுவதற்காக காதியானுக்கு வந்திருந்தார். அதற்கு முன்னதாக அதைப் பற்றிய எந்தவொரு தகவலோ அல்லது செய்தியோ இருக்கவில்லை; செய்தி கிடைத்திருக்கவும் முடியாது. அன்றைய தினம் காலையில் எங்கிருந்தோ, இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் கைது செய்வதற்கு விலங்குகளுடன் வாரண்ட் (கைது ஆணை) வரும் என்று நமது மீர் ஸாஹிப் அதாவது மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி)

கேள்விப்பட்டார்.

மீர் ஸாஹிப் அவர்கள் நிலைகுலைந்து, என்ன செய்வதென்று அறியாத நிலையில்' அதாவது மிகுந்த பதற்றத்துடன் காணப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. ஹஸ்ரத் அவர்களிடம் இச்செய்தியைத் தெரிவிக்க உள்ளே ஓடிவந்தார்கள். கடுமையான கவலையினால், மிகுந்த சிரமத்துடன் இந்த விரும்பத்தகாத செய்தியைத் தன் வாயிலிருந்து வெளிப்படுத்தினார்கள்; அதாவது பெரும் சிரமத்துடன் அதை எடுத்துரைத்தார்கள். 'அவர் வாரண்ட் எடுத்துக் கொண்டு வருகிறார்; தங்களுக்கு விலங்கிட்டுவிடுவார்' என்று மிகவும் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்கள். அந்நேரத்தில் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் 'நூருல் குர்ஆன்' என்ற நூலை எழுதிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக நுட்பமான மற்றும் மென்மையான கட்டுரையை எழுதிக் கொண்டிருந்தார்கள். தலையை உயர்த்தி, புன்னகைத்தவாறு கூறினார்கள்:

'மீர் ஸாஹிப்! மக்கள் உலக மகிழ்ச்சிகளில் வெள்ளி, தங்கக் காப்புகளை அணியத்தானே செய்கிறார்கள்; நாம் அல்லாஹ்வின் வழியில் இரும்பினால் ஆன காப்புகளை அணிந்து கொண்டோம் என்று கருதிக் கொள்வோம்.'

பிறகு சற்று யோசித்துவிட்டு கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது பெரும் தவக்குல் இருந்தது.

ஆனால் அப்படி எதுவும் நடக்காது, ஏனென்றால் அல்லாஹ் தஆலாவின் தனது அரசாங்கத்திற்கென சில நலன்களும் விவேகங்களும் உள்ளன; தன்னால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அத்தகைய இழிவு ஏற்படுவதை அவன் விரும்புவதில்லை.'

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 279, பதிப்பு 2022)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹமத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

மௌலவி சர்வர் ஷாஃ ஸாஹிப் (ரலி) அவர்கள் என்னிடம் கூறியது என்னவென்றால், குர்தாஸ்பூரில் கரம் தீன் என்பவருடன் வழக்கு நடந்து கொண்டிருந்த நாட்களில்தான் மாஜிஸ்திரேட் ஒரு தேதியை நிர்ணயித்திருந்தார். ஹஸ்ரத் அவர்கள் காதியானுக்கு வந்திருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் அந்த விசாரணைத் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக என்னை குர்தாஸ்பூருக்கு அனுப்பினார்கள்; அங்கு சென்று சில குறிப்புகளைத் தேடி எடுத்து நான் தயார் செய்து வைப்பதற்காக என்னை அனுப்பினார்கள். ஏனெனில் அடுத்த விசாரணையில் அக்குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது.

கூறுகின்றார்கள்: நாங்கள் குர்தாஸ்பூர் வீட்டுக்கு சென்றதும், கீழிருந்து மர்ஹூம் டாக்டர் முஹம்மது இஸ்மாயீல் அவர்களை நாங்கள் அழைத்தோம்; கதவைத் திறக்கச் செய்வதற்காக அவர்களின் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் குரல் கொடுத்ததும் டாக்டர் அவர்கள் மிகுந்த பதற்றமடைந்து கட்டுப்பாடின்றி அழத் தொடங்கிவிட்டார்கள். இறுதியாகச் சிறிது நேரத்திற்குப் பிறகு கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கீழே வந்து, என்னிடம் முஹம்மது ஹுஸைன் முன்ஷீ வந்திருந்ததாகக் கூறினார்கள். அவர் நீதிமன்றத்தின் முன்ஷீ ஆவார்; எழுத்தர் ஆவார்; மேலும் அவர் நமது இயக்கத்தின் எதிரியும் ஆவார்; ஆயினும், அவர் என்னிடம் வந்து இந்த விஷயத்தைக் கூறினார்:

இன்று ஆரியர்களின் ஒரு கூட்டம் நடந்தது; ஒரு ஆரிய நண்பர் என்னையும் தன்னுடன் (அங்கு) அழைத்துச் சென்றிருந்தார்; கூட்டத்தின் நடவடிக்கைகள் முடிந்த பிறகு, மற்றவர்கள் அனைவரும் சென்றுவிடுமாறும், தங்களுக்குள் ஒரு தனிப்பட்ட (அந்தரங்க) கூட்டம் நடைபெறும் என்றும் அறிவித்தார்கள்.

ஆக, அவர் கூறுகின்றார்: அந்த நண்பர் என்னிடம், 'நீங்கள் ஒரு மூலையில் அமர்ந்திருங்கள், நாம் ஒன்றாகவே செல்வோம்' என்று கூறினார். எப்படியோ அங்கு அந்தத் தனிப்பட்ட கூட்டம் நடந்தது; அதில் ஒரு நபர் எழுந்தார். இதனை முஹம்மது ஹுஸைன் கூறினார்.

அந்த நபர் கூறினார்: மாஜிஸ்திரேட்டிடம் மிர்ஸா ஸாஹிப் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு: 'இவர் நம்முடைய மிகக் கடுமையான எதிரியும், நம் தலைவர் லேக்ராமின் கொலையாளியும் ஆவார். இப்போது அவர் உங்கள் கைகளில் உள்ள இரை ஆவார்; முழு சமுதாயத்தின் பார்வையும் உங்கள் மீது உள்ளது. இந்த வேட்டையை நீங்கள் நழுவவிட்டால், நீங்கள் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் எதிரியாகிவிடுவீர்கள்' என்று உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் பேசினார்.

அதற்கு, அந்த மாஜிஸ்திரேட் இவ்வாறு பதிலளித்தார்; என்னால் இயலும்பட்சத்தில் 'மிர்ஸாவை மட்டுமல்ல; மாறாக, இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அவருடைய சகாக்கள் மற்றும் சாட்சிகள் அனைவரையும் நரகத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதே ஆரம்பம் முதலே எனது எண்ணமாகும்; ஆனால் என்ன செய்வது, இந்த வழக்கு எவ்வளவு சாதுரியமாக நடத்தப்பட்டு வருகின்றது என்றால், அதில் கைவைக்க சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இருப்பினும் நான் உறுதியளிக்கிறேன்; என்னதான் நடந்தாலும் சரி, இந்த முதல் விசாரணையிலேயே நான் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவேன்' என்று கூறினார். முஹம்மது ஹுசைன் என்னிடம், 'நீதிமன்ற நடவடிக்கை என்றால் என்னவென்று நீங்கள் புரிவதில்லை?' என்றார். இதன் பொருள் என்னவென்றால், வழக்கின் தொடக்கத்திலோ அல்லது வழக்கின் இடையிலோ, எப்போது விரும்பினாலும் குற்றம் சாட்டப்பட்டவரைப் பிணையை ஏற்றுக் கொள்ளாமல் கைது செய்து காவலில் அடைத்து விடுவதாகும்.

இந்தச் செய்தியைத் தெரிவித்த பிறகு அவர் கூறினார்: எனவே 'மருத்துவர் அவர்களே, நான் உங்களுக்கு இந்தச் செய்தியை எட்ட வைத்துவிட்டேன். நீங்கள் இதற்கு ஏதாவது ஏற்பாட்டைச் செய்து கொள்ளுங்கள். என் கருத்தின்படி இரண்டு யோசனைகள் உள்ளன.'

அவர் நீதிமன்றத்தில் பணியாற்றி வந்தார். அவர் தனது சட்டப்பூர்வ பார்வையில் ஆலோசனை வழங்கினார்; 'ஒன்று, இந்த வழக்கை இங்கிருந்து தலைமை நீதிமன்றத்திற்கு மாற்ற முயற்சி செய்ய வேண்டும். மற்றொன்று, என்ன ஆனாலும் சரி மிர்ஸா அவர்கள் அடுத்த வழக்கு விசாரணையில் நீதிமன்றத்தில் ஆஜராகக் கூடாது; மேலும், மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பித்து விடவேண்டும்'.

கூறுகின்றார்கள்: நாங்களும் மிகவும் பயந்துவிட்டோம்; இப்போதே காதியானுக்கு ஒருவரை அனுப்பி ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இரவாகிவிட்டதால் எந்த வாகன வசதிக்கான ஏற்பாடு செய்ய முடியாமல் இருந்தது. எனவே இரண்டு அல்லது மூன்று நபர்கள் கால்நடையாகவே காதியான் நோக்கிக் புறப்பட்டனர். ஃபஜ்ர் தொழுகை நேரத்தில் காதியான் சென்றடைந்தனர்.

சுருக்கமாக, ஹுஸூர் (அலை) அவர்களின் முன்னிலையில் விஷயத்தைத் தெரிவித்தனர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், 'சரி! நாம் படாலாவுக்குச் செல்வோம்; காஜா ஸாஹிப் அவர்களும், மௌலவி முஹம்மது அலீ ஸாஹிப் அவர்களும் லாகூரிலிருந்து திரும்பும்போது அங்கு நம்மைச் சந்திப்பார்கள்; அவர்களிடம் இதுபற்றிப் பேசலாம். வழக்கை மாற்றுவதற்கான முயற்சியின் முடிவு என்னவாயிற்று என்பதும் அங்கே தெரிந்துவிடும் என்று அலட்சியமாக கூறினார்கள். அவர்கள் அதற்காக முன்னரே சென்றிருந்தனர்'. அதன்படி அன்றைய தினமே ஹுஸூர் (அலை) அவர்கள் படாலா சென்று விட்டார்கள். வண்டியில் மௌலவி முஹம்மது அலீ அவர்களும், காஜா அவர்களும் வந்து சந்தித்தனர். வழக்கை மாற்றுவதற்கான முயற்சி வெற்றி பெறவில்லை என்ற தகவலை அவர்கள் தெரிவித்தனர்.

இதைக் கேட்ட பிறகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் திரும்பிச் செல்லவில்லை. மாறாக, அன்னார் (அலை) குர்தாஸ்பூருக்குச் சென்று விட்டார்கள்; வழியில் காஜா ஸாஹிப் அவர்களுக்கும் மௌலவி அவர்களுக்கும் இச்சம்பவம் குறித்துத் தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை. மாஜிஸ்திரேட்டிடமிருந்து இத்தகவல் வந்துள்ளது என்பதைப் பற்றியும் எதையும் கூறவில்லை. அன்னார் (அலை) குர்தாஸ்பூர் வீட்டை சென்றடைந்ததும், வழக்கம்போல தனி அறையில் ஒரு

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த TOLL FREE எண்ணில்
:போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்
தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
. (13:29)

A. Khaleel Ahmad
(Melapalayam)

கட்டிலில் படுத்துக் கொண்டார்கள். ஆனால், 'இனி என்ன ஆகுமோ?' என்று அந்த நேரத்தில் எங்களுக்கு மெய் சிலிர்த்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் என்னை அழைத்தார்கள். நான் உள்ளே சென்றபோது, அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் தங்களின் இரு கைகளையும் ஒன்று சேர்த்துத் தலைக்கு அடியில் வைத்துக் கொண்டு நேராகப் படுத்திருந்தார்கள். நான் சென்றதும், ஒரு பக்கமாகத் திரும்பி, முழங்கையை ஊன்றித் தனது உள்ளங்கையில் தலையைத் தாங்கியவாறு சாய்ந்து கொண்டு என்னிடம் கூறினார்கள்:

'மாஜிஸ்திரேட் என்ன கூறினார்? என்ற முழு விவரத்தையும் கேட்பதற்காகவே நான் உங்களை அழைத்தேன்.' நான் நடந்த முழு சம்பவத்தையும் கூறினேன்; இன்னின்னவாறு அவர் கூறினார் என்று விளக்கினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: தற்போது எனது கையில் இரை ஆவார் என்று அவர் கூறினார் என்று கூறியவாறு நான் 'இரை' என்ற வார்த்தையை அடைந்ததும்- மாஜிஸ்திரேட் அவ்வாறு கூறியிருந்தார் அல்லவா? 'இப்போது என் கையில் இரை சிக்கியுள்ளது' என்ற அந்த வார்த்தையை கூறிய உடனேயே, சட்டென்று ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் எழுந்து அமர்ந்து விட்டார்கள்; அன்னாருடைய கண்கள் பிரகாசமடைந்தன; முகம் சிவந்து விட்டது.

மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்:

'நான் அவருடைய இரையா? நான் இரையல்ல. நான் ஒரு சிங்கம் ஆவேன்; அதுவும் இறைவனின் சிங்கம். அவர் இறைவனின் சிங்கத்தின் மீது கை வைக்க முடியுமா? அவர் அப்படிச் செய்து பார்க்கட்டும்!'

இந்த வார்த்தைகளைக் கூறியவாறே அன்னாருடைய குரல் எவ்வளவு உரக்க ஒலித்ததென்றால், அறையின் வெளியில் இருந்த மக்கள் அனைவரும் திடுக்கிட்டு ஆச்சரியத்துடன் அங்கும், இங்கும் பார்த்தார்கள்; ஆனால் அறைக்குள் யாரும் வரவில்லை. ஹுஸூர் (அலை) அவர்கள் பலமுறை 'இறைவனின் சிங்கம்' என்ற வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கூறினார்கள். மேலும், எப்போதும் தாழ்ந்தும் அரைவாசியாக மூடியும் இருக்கின்ற அன்னாரின் கண்கள் அந்த நேரத்தில் உண்மையான சிங்கத்தின் கண்களைப் போலத் திறந்து சுடர் போல மின்னிக் கொண்டிருந்தன; முகம் அவ்வளவு சிவந்திருந்தது. அதை நேருக்கு நேர் பார்க்கவே முடியாத அளவுக்கு இருந்தது. பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்:

'நான் என்ன செய்வது? 'உன் மார்க்கத்திற்காக என் கைகளிலும் கால்களிலும் இரும்பை அணிய நான் தயாராக இருக்கிறேன்' என்று நான் இறைவன் முன் முறையிட்டுள்ளேன்.

அதாவது, கைவிலங்குகளை அணிந்து கொள்ள தயாராக உள்ளேன்.

ஆனால், அவன் கூறுகிறான்: 'இல்லை, நான் உன்னை இழிவிலிருந்து பாதுகாப்பேன் மேலும் கண்ணியத்துடன் விடுவிப்பேன்.'

அடுத்து, ஹுஸூர் (அலை) அவர்கள் இறை நேசத்தைப் பற்றி உரையாடத் தொடங்கிவிட்டார்கள்; ஏறத்தாழ அரை மணி நேரம் மிகுந்த உத்வேகத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் இந்த வார்த்தைகள் இருந்ததால், 'என்ன நடந்தாலும் சரி, மாஜிஸ்திரேட் என்ன வேண்டுமானாலும் கூறிக் கொள்ளட்டும்; அவர் ஒருபோதும் என் மீது கை வைக்க முடியாது' என்று அன்னாருக்கு முழுமையான நம்பிக்கையும், தவக்கலும் இருந்தது.

(ஸீரத்துல் மஹ்தி பாகம் 1, பக்கம் 84 -88, விவரிப்பு எண்: 107)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த நிகழ்வைக் குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்:

'ஈமானின் சக்தி என்பது மிகப் பெரியது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு நிகழ்வாகும். அன்னார் (ரலி) கைது தொடர்பான இதே நிகழ்வை கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் அந்த சபையில் இல்லை. நான் குர்தாஸ்பூரிலே இருந்தேன். ஆனால், இந்த நிகழ்வு நடந்த அந்தச் சபையில் இருக்கவில்லை; எனக்கு ஒரு நண்பர் இதைத் தெரிவித்தார்.

அன்னார் (ரலி) காஜா கமாலுத்தீன் ஸாஹிபைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். காஜா கமாலுத்தீன் ஸாஹிபை பின்னர் அழைத்திருக்கக் கூடும். இன்ன மாஜிஸ்திரேட்டிடம் வழக்கு உள்ளது; மேலும் ஆரியர்கள் அவரிடம், 'மிர்ஸா சாஹிப் நமது மதத்திற்கு எதிரானவர் ஆவார்; அவருக்குத் தண்டனை அளியுங்கள், இதுவே உங்கள் சமுதாயப் பணியாக இருக்கும்' என்று மிகவும் வலியுறுத்தியுள்ளனர் என்று காஜா கமாலுத்தீன் ஸாஹிப் அவர்களும், மற்ற அஹ்மதிகளும் பதற்றமடைந்திருந்தார்கள்.

ஆக, எவ்வாறாயினும், 'சரி, நான் கண்டிப்பாகத் தண்டனை வழங்குவேன்; இப்போது அவர் என் கைகளில் சிக்கியுள்ளார்' என்று அந்த மாஜிஸ்திரேட் கூறியிருந்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டதும். தமது முழங்கையை ஊன்றி ஒருக்களித்துப் படுத்துக் கொண்டு, 'காஜா சாஹிப்! இறைவனின் சிங்கத்தின் மீது எவரேனும் கை வைக்க முடியுமா?' என்று கூறினார்கள். ஆக, அல்லாஹ் அந்த நீதிபதிக்குத் தண்டனை அளித்தான்.

இந்த நிகழ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூடுதலாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அந்த நீதிபதிக்கு வழங்கப்பட்ட தண்டனை என்னவென்றால், முதலில் அவர் குர்தாஸ்பூரிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார்; பின்னர் அவருக்குப் பதவி இறக்கம் ஏற்பட்டது. அதாவது, அவரது பதவி உயர்வு நிறுத்தப்பட்டது மட்டுமன்றி, அவருக்குக் கீழ்நிலைப் பதவி வழங்கப்பட்டது. அவர் உதவி ஆணையராக இருந்தார்; கூடுதல் அஸிஸ்டெண்ட்

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....

கண்ணியத்திற்குரிய பத்ர் வாரப் பத்திரிகை காதியான் வாசகர்களின் கவனத்திற்கு

காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகளின் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய பராமரிப்பில் இந்த பத்திரிகை முற்றிலும் வளர்ந்தாகும் என்ற பெருமையை பத்ர் பத்திரிகை பெற்றுள்ளது. தொடக்கம் முதல் இன்று வரை, முதலில் நபித்துவத்தின் கீழும், பின்னர் நபித்துவத்தின் வழியிலான கிலாஃபத்தின் நிழலிலும் இந்த பத்திரிகை தனது தஃப்லீக் மற்றும் தர்பிய்யத் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டு செல்கிறது. இந்த பத்திரிகையின் மூலம் பல நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் அஹ்மதிய்யத்தில் வந்து இணைந்துள்ளன. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வழிகாட்டுதல்களின் ஒளியில், இந்த பத்திரிகையின் மூலம் அஹ்மதி குடும்பங்களுக்கு தர்பிய்யத் வழங்கப்பட்டு வருகிறது; இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்திலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

பத்திரிகைத் தயாரித்தல், அச்சிடுதல், பேக்கிங் செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றில் பெரும் செலவுகள் ஏற்படுகின்றன. குறைந்தபட்ச சந்தா தொகையைக் கொண்டு மட்டும் இச்செலவுகளை ஈடுகட்ட முடியாது. எனவே, காலத்தின் இமாமுடைய இந்த பத்திரிகையின் செலவுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறப்பு உதவியாளர்கள் மிக அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இந்த பத்திரிகைக்கு நிதி உதவி செய்பவர்களின் உதவியை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில் உமக்கு உதவுபவர்களுக்கு நான் உதவுவேன் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். உதவியாளர்களின் அனைத்து விவகாரங்களையும் அல்லாஹ்வே பாதுகாப்பான். மேலும் தனது வாக்குறுதியின்படி அவர்களின் தொழில், வேலைவாய்ப்பு, தோட்டம், விளைச்சல் மற்றும் செல்வத்தில் பல மடங்கு பரக்கத்தையும் தருவான். இன்ஷா அல்லாஹ்!

எந்தவொரு வழிகாட்டுதலுக்கும் வாராந்திர 'பத்ர்' பத்திரிகையின் மேலாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு எண்
9815639670

* * * * * * * * * * * *

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகின்றார்கள்:

துஆவை மறுப்பவர் இறைவனை மறுப்பவர் ஆவார். ஏனெனில், இறைவனை அறிந்துகொள்வதற்கான ஒரே வழிமுறை துஆ மட்டுமே ஆகும். வந்துவிட்டது.

* * * * * * * * * * * *

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 12 NOVEMBER 2026 Issue No. 46

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கமிஷனரிலிருந்து அவர் முன்சிஃப் (சாதாரண நீதிபதி - simple magistrate) ஆக்கப்பட்டு விட்டார். பின்னர் மற்றொரு நீதிபதி வந்து தீர்ப்பு வழங்கினார்; அந்தத் தீர்ப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குச் சாதகமாக இருந்தது.
(பஃஸ் அஹம் வ ஸரூரி உஃபூர் - அன்வாருல் உலூம், தொகுதி 16, பக்கம் 293)

இதே வழக்கைப் பற்றி சௌத்ரி குலாம் ஸர்வர் பாஜ்வா சாஹிப் எடுத்துரைக்கின்றார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது கரம் தீன் தொடுத்த குற்றவியல் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் பல ஆலிம்களும், வழக்கறிஞர்களும் ஆலோசனை செய்துவிட்டு, வழக்கைத் தள்ளிவைக்க (இடமாற்ற செய்ய) முயற்சி செய்ய வேண்டும் என்று அன்னாரிடம் கூறினர். அதற்கு அன்னார் (அலை) இவ்வாறு பதிலளித்தார்கள்:

'முழு நம்பிக்கையையும் காரணிகளின் மீது வைக்காதீர்கள்; மாறாக, இறைவன் மீது முழுமையாகச் சார்ந்திருங்கள்.' (ரிவாயாத் அஸ்ஹாபே அஹ்மத், தொகுதி 1, பக்கம் 85)

கரம் தீன் வழக்கின் தீர்ப்பு நாளன்று ஹுஸூர் (அலை) அவர்களின் தவக்குலின் மகிமையின் வெளிப்பாடு சற்று இவ்வாறு இருந்தது:

அதாவது, பாபு குலாம் முஹம்மத் ஸானி சாஹிப் எடுத்துரைக்கின்றார்கள்: 'ஆத்மராமுக்கு முன்பாக ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

'இந்த நபர் மிகவும் தீய உள்ளம் கொண்டவர் ஆவார்; இவரது உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பது தெரிய வருவதில்லை. நேரில் வரும்போது கைகட்டி நின்று விடுகிறார்; மிகுந்த பணிவோடு வந்து, 'ஹுஸூர்! உங்கள் காலடியில் விழ முடியாத நிலையில் எனது பதவி இருக்கிறது' என்று கூறுகிறார்;

மிகவும் பணிவு காட்டுகிறார். ஆனால், நாள் முழுவதும் அமரவைத்துவிட்டு, 'நாளைக்கு வாருங்கள்' என்று கூறிவிடுகிறார். தினமும் இப்படியே செய்கிறார்.' இது துன்புறுத்துவதற்கான ஒரு வழிமுறை என்றால், வெளிப்படையில் கைகூப்பி சிலவற்றை பேசுவார்; ஆனால் நடைமுறையில் வேறு எதையோ செய்து கொண்டிருப்பார்.

எவ்வாறாயினும், ஆத்மாராமின் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கும் நேரம் வந்தபோது, அந்த நேரத்தில் அங்குப் பெருமளவில் காவல்துறை வரவழைக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது; காவல்துறையினர் நீதிமன்ற வளாகம் முழுவதையும் சுற்றி வளைத்திருந்தனர். அந்த நேரத்தில் காஜா சாஹிப், அதாவது காஜா கமாலுத்தீன் சாஹிப். இவர் தண்டனை வழங்கிவிடுவார் என்றே பொருள் கூறினார். பிறகு அவர்கள் இந்த எளியவனை விளித்து இவ்வாறு கூறினார்: இந்த நபர் தீமை செய்வதிலேயே உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது என்ற எனது தூதுச் செய்தியை 'ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களிடம் சென்று கூறுங்கள்; மேலும், ஹுஸூர் (அலை) அவர்கள் உத்தரவிட்டால், மூன்று வழக்கறிஞர்களை வரவழைத்துக் கொள்ளலாம். லாகூரிலிருந்து வழக்கறிஞர் முஹம்மது ஷா, பஃஸல் தீன் ஸாஹிப், மற்றும் மூன்றாவது நபர் நான். ஒருவரை டிவிஷனல் நீதிமன்றத்திற்கு அனுப்பலாம்; மற்றொருவரை சுற்றுப்பயணத்தில் இருக்கும் ஆளுநரிடம் அனுப்பலாம்; மூன்றாவதாக நான் இங்கு இருக்கிறேன்'

நான் சென்று ஹுஸூர் (அலை) அவர்களிடம் இதைத் தெரிவித்தபோது, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் மிகவும் சிரித்தார்கள். 'செல்ல வேண்டாம்! இவர் பிடித்து விடுவார் என்பதற்காகவா இந்த யோசனைகள் எல்லாம்?'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், 'இவர் காஷ்மீரி அல்லவா, அதனால் தைரியத்தை இழந்துவிட்டார்' என்று கூறலானார்கள். மேலும் கூறினார்கள்:

சென்று அவரிடம் கூறுங்கள்: இன்று வரை உங்களுடைய வார்த்தைகளை நாம் சட்டரீதியாகப் பின்பற்றி வந்தோம்; நீங்கள் சட்டரீதியாகக் கொடுத்து வந்த ஆலோசனைகளை நான் ஏற்றுக் கொண்டு வந்தேன். இனி இதை இறைவனிடம் விட்டுவிடுங்கள். இப்போது என் முழு நம்பிக்கையும் இறைவன் மீதே உள்ளது; உங்கள் மீது அல்ல'.

நான் சென்று அவ்வாறே கூறிவிட்டேன். காஜா ஸாஹிப் முகம் சுளித்து, தலையைக் குனிந்தபடி நின்றார்கள்.'
(ரிவாயாதே அஸ்ஹாபே அஹ்மத், தொகுதி 4, பக்கம் 235)

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதற்கான ஓர் அற்புதமான மகிமை அன்னாரிடம், தமது எஜமானர் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதில் எல்லா இடத்திலும் தென்படுகிறது.

அல்லாஹ் தஆலா நமக்கும் தவக்குலின் உயர்ந்த தரத்தை அடைவதற்கான நற்பேறை வழங்குவானாக.
(தினசரி அல்-ஃபஸல் இன்டர்நேஷனல், 16 அக்டோபர் 2026, பக்கம் 8)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * * *

1-ம் பக்கத் தொடர்ச்சி.....

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கூற்றுகள்)

உண்ணுகிறார்; அதன் பிறகு அவர்களுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படுகிறது. ஆக, எப்போதும் அபாயம் நிலவுகிறது; எந்நேரமும் எச்சரிக்கை மேற்கொள்ளப்படுகிறது; எந்நேரமும் நிம்மதியின்மை நிலவுகிறது.

ஆனால் நமது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாருங்கள்: எல்லாபுறமும் எதிரிகளே சூழ்ந்திருந்தனர், ஆனால் எவ்வித அபாயமும் இல்லை; முழுமையான அமைதியும், மகிழ்ச்சியும் உள்ளது.

எதிரி விருந்திற்கு அழைத்தாலும் கூட அச்சமின்றிச் சென்றுவிடுகிறார்கள். ஒருமுறை ஓர் யூதப் பெண்மணி விஷமும் கொடுத்து விட்டார்; ஆனால், அவ்வாறிருந்தும் அல்லாஹ்வின் வஹீயால் அன்னாருக்கு இந்த விஷயம் தெரிந்து விட்டது. மேலும் அன்னார் (ஸல்) அதிலிருந்து பாதுகாப்பாக இருந்தார்கள். (இப்னு ஹிஷாம் அவர்களின் நூல் ஸீரத்துன் நபி , அம்ரே கைபர் என்ற தலைப்பு).

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அளவு மனநிறைவு எப்படி இருந்தது? இதற்கான காரணம் என்னவென்றால், மறைவானவற்றை அறிந்த ஓர் இருப்புடன் (அதாவது அல்லாஹ்வுடன்) அன்னார் (ஸல்) தொடர்பு வைத்திருந்தார்கள். அவனுடன் ஒருவருக்கு தொடர்பு ஏற்பட்டு விடுகின்றபோது, அந்த இறைவன் தனது மறைவான ஞானத்திலிருந்து தனது அடியாருக்கும் தேவைக்கேற்ப பங்கு வழங்கிக் கொண்டிருக்கிறான்.

எனவே, அவனுடன் தொடர்பு வைக்கக் கூடியவர் மனநிறைவுடன் இருக்கிறார்.'
(தஃப்ஸீரே கபீர், தொகுதி 5, பக்கம் 276, அர்-ரஃது 13, ஆன்லைன் பதிப்பு

* * * * * * * * * * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad